# எழுத்து

எட்டாம் ஆண்டு

ஆசிரியர் : சி. சு. செல்லப்பா


இலக்கியமும் சோதனையும்
தலையங்கம்

உங்கள் காதுக்கு
சு. சங்கரசுப்ரமண்யன்

ரகஸ்யம்
டி. ஆர். பெண்ட்ரே

இன்றைய தமிழ் இலக்கியத்தில் சில போக்குகள்
க. நா. சுப்ரமண்யம்

தற்கால தமிழ் இலக்கியம்
சி. சு. செல்லப்பா

நிலாக் கனவு
எஸ். வைதீஸ்வரன்

மரப்பாவைகள்
காரூர் நீலகண்ட பிள்ளை

எண்ணத் திவலைகள்
கி. ரா.

தேடுதல்
தர்மு சிவராமு

ஆசிரியர் பேச்சு



CONNEMARA PUBLIC LIBRARY
1 FEB 1965
MADRAS



பிப்ரவரி 66

86

50 பைசா

8-ம் ஆண்டு
ஏடு 86
பிப்ரவரி
1966

# எழுத்து

ஆசிரியர் :
சி. சு. செல்லப்பா

தலையங்கம்

## இலக்கியமும் சோதனையும்

'இலக்கியமும் சோதனையும்' 'நாடகத்தில் சோதனைகள்' என்ற இரண்டு கருத்துப் பரிமாறுதல் கூட்டங்கள் க. நா. சுப்ரமண்யம் அவ்வப்போது சென்னையில் நடத்தும் 'இலக்கிய வட்டம்' சார்பில் சென்ற மாதம் நடைபெற்றவை. குறிப்பிடத்தக்கவை இரண்டும். சமீபத்தில் ஆல்வேயில் நடைபெற்ற அகில இந்திய எழுத்தாளர் மகாநாட்டின் விளைவு என்றுதான் சொல்லவேண்டும். சென்னையில் உள்ள தமிழ், தெலுங்கு கன்னட, மலையாள எழுத்தாளர்கள், விமர்சகர்கள் அடங்கிய ஒரு சந்திப்பு வாய்ப்பாக இவை இருந்தது. இதுவரை சென்னையில் நடந்திராத நிகழ்ச்சி இதோடு, இரண்டு கூட்டங்களிலும் தரமாகவே பேச்சும் விவாதமும் இருந்ததும் குறிப்பிடத்தக்கது நான்கு மொழிக்காரர்கள் கூட்டம் ஆதலால் இங்கிலீஷிலேயே பேச்சுக்கள் இருந்தன. இந்தவிதமான வாய்ப்பு தொடர்ந்து பெருகுமானால் தென்னிந்திய எழுத்து உலகத்துக்கு நல்ல பயன் நாளாவட்டத்தில் ஏற்படக்கூடும் என்றே தோன்றுகிறது. பார்ப்போம்.

இலக்கியத்தில் சோதனைகள் என்று நாம் சொல்கிறபோது இதுவரையில் உள்ளடக்கம், வடிவம், நடை சம்பந்தமாக ஏற்கெனவே கையாளப்பட்டு வந்திருப்பதை எல்லாம் மனதில் கொண்டு, அவைகளிலிருந்து மாறுபட்டு வருகிற புதிய முயற்சிகளைத் தான் நாம் சொல்கிறோம். நாவல், கவிதை, சிறுகதை, நாடகம் ஆகிய துறைகளில் அவரவர் காலத்தில் அவரவர் வாழ்வு நோக்குக்கு அனுபவ வெளியீட்டுக்கு ஏற்ப உட்பொருளை தேர்ந்தெடுத்துக்கொள்வதையும் உருவத்தை ஆக்கிக் கொள்வதையும் நடையை வகைப்படுத்திக் கொள்வதையும் நாம் பார்க்கிறோம். நதாலி ஸாரெட் என்ற எழுத்தாளர் சொல்லி 'இருப்பதுபோல், 'இதுவரை மற்றவர்களால் காணப்பட்டிராத உண்மையின் ஒரு அம்சத்தைப் பற்றச் செய்யும் ஒருவித முயற்சியை வெளியிடுவது அந்த குறிப்பிட்ட அம்சத்தை தொற்றவைக்க ஒரு வடிவத்தை கண்டுபிடிப்பது என்று அர்த்தம்' கொடுக்கலாம் சோதனை என்பதுக்கு.

இந்த சோதனை இயல்பானது மனித வாழ்வில். நம்மை அறியாமலும் அறிந்தும் செய்து கொண்டே வருகிறோம். உணவில், உடைகளில் பழக்க வழக்கங்களில், அரசியலில், தத்துவத்தில், சமூகத்தில் ஒன்றையே தொடர்ந்து அதிகமாக பின்பற்றிவந்த சலிப்பில் புதுசுக்கு மனது தானாக திரும்புகிறது. இன்றய புதுப்புது கட்டிடங்கள் தான் எத்தனை விதமாக கட்டப்படுகின்றன! எந்தெந்த பொருள்களோ அழகுபடுத்துகின்றன. பழுக்காச் சொப்பு, மரப்பாச்சியிலிருந்து பிளாஸ்டிக் நாளுக்கு வந்துவிட்டோம்; பருத்தியிலிருந்து டெர்லின் நாட்களுக்கு. இன்னும் அடுத்து எதுவோ? இப்படி எதிலும் சோதனை, சோதனை!

எனவே கலை, இலக்கியத்துறைகளிலும் சோதனைகள் செய்ய முற்படும் மனதுகள் அவ்வப்போது பிறப்பது நியாயமே. இப்போது நம் தமிழ்நாட்டில் இலக்கியத்துறையில் பரவலாக பரவி இருக்கும் ஒரு விசித்திரமான நிலையை பார்க்கிறோம். மற்றவைகளில் சோதனையை வரவேற்கிறவர்கள் இலக்கியத்துக்கு வரும்போது மரபுப் புலியை காட்டி பயமுறுத்துகிறார்கள். எங்கள் இரண்டாயிரம் வருஷத்து மரபு, ஆமாம், என்று எச்சரிக்கிறார்கள். அப்படி கொஞ்சம் தைர்யமாக புலியை நோக்கி ஒருவன் வந்தால் 'சரி, போ, நாவல், சிறுகதை அவை புதுசாக இருப்பதால் நீ ஏதோ செய்து கொண்டு போ, ஆனால் கவிதை கிட்ட மட்டும் விரல் வைக்காதே!' என்று மிரட்டுகிறார்கள். பாரதிக்குப் பிறகும், அவனை ஏற்றுக் கொண்ட பின்னும் (எப்படி ஏற்றுக்கொண்டார்களோ) உலக இலக்கியப் போக்கை அறியாதவர்கள் இன்னும் கிணற்றுத் தவளைக் குரலை எழுப்பிக் கொண்டுதான் இருக்கிறார்கள். இவர்கள மொழிக்கு இருக்கும் இலக்கண, இலக்கிய மரபு உலகத்து எந்த மொழிக்கும் இருக்கிறது. அதை மீறித்தான், அந்த மரபுப்புலியை அடக்கி அதன் மீது சவாரி செய்து தனக்கு பழக்கமாக்கிக் கொண்டே வருகிறான் ஒவ்வொரு சோதனைக்காரனும் என்பதை இவர்கள் என்றுதான் அறியப் போகிறார்கள்? புரியப்போகிறது இவர்களுக்கு?

மரபுபுலியை அடக்கி தன் வசப்படுத்திக்கொள்ளும் ஒரு வேட்டைக்கார மனப்பான்மை இன்றய எழுத்தாளனாக ஆக விரும்புபவனுக்கு இல்லாததுதான் இந்த கிலி பிடித்தவர்களின் ஓலம் இன்னும் நீடிப்பதுக்கு காரணம். யாப்பு மரபு தெரியாது எழுதப்பட்டவை இன்றய புதுக் கவிதைகள் என்பதும் உருவத்தை சரியாக வரையத் தெரியாததால்தான் 'மாடர்ண்' ஓவியங்கள் வரையப்படுகின்றன என்பதும் பரிகசிக்கத்தக்க அபிப்பிராயங்கள் ஆகும்.

இன்னொரு தினிசான போக்கும் காண்கிறது. தன் கால சோதனை, தான் செய்த சோதனை தனக்குப் பிடித்தமாகிவிட்ட சோதனை இவைகளை மட்டும் சொல்லிக்கொண்டு அதுக்கு மேல், அதாவது தனக்கு எட்டாத, பிடிக்காத, தனக்குப்பின் வருகிற சோதனைகள் வரும்போது, 'சோதனை என்பதெல்லாம் அர்த்தமற்றது' என்று பெரிய மனித கருத்தாகச் சொல்வதுதான் அது. தன் சோதனை முயற்சிக்கு உந்துதலாக முன்னோடிகள் இருந்த மாதிரி, பின்னோடிகளுக்குதான் முன்னோடியாகிவிட்டதை உணராமல் நிதானிக்கிற சுய திருப்தி மனப்போக்கு இது

இந்தவித மனப்பான்மைகள் இல்லாமல், இலக்கிய இயக்கம் என்பது மற்ற எந்த துறைகளிலும் போலவே இடையறாத இயக்கம், புதிய தெரியவந்திராத அனுபவங்களை வெளியிடுவது, தெரிந்தவைகளிலிருந்து தெரியாதவைகளை தேடுவது, இலக்கியத்தில் சோதனை என்பது ஒரு நாட்டம், தேட்டம் உள்ள மனம், அது மனப்பூர்வமான நிஜமான அடிப்படையில் அமைந்தது என்பதை மனதில் போட்டுக் கொள்கிறபோதுதான் இலக்கியம் வளர்ச்சி காணும்; ரசனை பெருகும்.

# உங்கள் காதுக்கு

## சு. சங்கரசுப்ரமண்யன்

**பாரதி புகழ்**

பிறநாட்டு நல்லறிஞர் தமிழிலக்கிய வளர்ச்சியைப் பற்றி அறிய விரும்புகின்றனர்' துணிவுடைய சிலர், 'இக்பால், தாகூர், வள்ளத்தோல், பிரேம்சந்த், முல்க்ராஜ் தகழி, தாராசங்கர் போல் உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர உங்கள் மொழியில் இல்லையா?' என்கின்றனர். பாரதியின் பெயரும் பலர் அறிந்த பெயராகப் பரவவில்லை' பலவருஷங்களுக்கு முன்பு இவ்வாறு எழுதியவர் டாக்டர் மு வரதராசன். பாரதி புகழைப்பற்றிய இந்தக் கூற்று பல்கலைக்கழக உயர்மட்டப் பேராசிரியரிடமிருந்து வருவதால், நம்மைப் பற்றிய வீணான தாழ்வு மதிப்பீடு என்று சொல்லுவதற்கில்லை.

பாரதியின் சொந்த இலக்கணப்படி பார்த்தாலே, வெளிநாட்டார் செய்யும் வணக்கமே திறனான புலமைக்கு அடையாளம். எட்டையபுரத்து 'நடிகர்' விழாக்களும்வாணிமஹால் 'ஏழை' விழாக்களும் இதைச் சாதிக்க முடியாது பாரதியைப் பற்றி அறிந்து கொள்வதற்கு இலக்கிய ரீதியான முயற்சிகள் உண்மையிலேயே வழிசெய்யும், அது தான் நியாயமான வழி என்றாலும், அவன் புகழைப் பரப்புவதற்கு புறவழிச் செயல்களும் தேவைதான் என்று தோன்றுகிறது. எத்துறை மேதைக்கும் இது பொது விதி. சிலை எழுப்பிச் சீராட்டுவதும், படம் திறந்து பாராட்டுவதும், நினைவு மண்டபம் கட்டுவதும், கண்காட்சி நடத்துவதும் தவிர்க்க முடியாத அஞ்சலிப் பணிகளாக அமைந்து விட்டன, வீட்டுக்கு வீடு பாரதி படம் திறப்பதும், பாரதி வாழ்ந்த இல்லத்தின் முகப்பில் சலவைக் கல்லைப் பதிப்பித்து சலசலப்பு ஏற்படுத்தவும். அந்த வீட்டை அரசாங்கம் விலைக்கு வாங்கவேண்டும் என்று ஆண்டு தவறாமல் தர்மத் தீர்மானம் நிறைவேற்றுவதும் தவிர்க்க முடியாத சடங்கு அம்சங்கள். பாரதியின் அந்தஸ்து அதிக பட்ச எல்லையை எட்டியது அவருடைய மீசையும் தலைப்பாகையும் அஞ்சல் தலையில் ஏறியபோது, நல்ல வேளையாக வள்ளுவரைப் போல 'உருவம் சிருஷ்டி செய்ய வேண்டிய அவஸ்தை அவனுக்கு இல்லை.

இவை எல்லாவற்றையும் மீறி, பாரதியின் பெயர் உரிய இடத்தில் விடுபட்டுப் போன உண்மை சமீபத்தில் தெரியவந்திருக்கிறது. சோவியத் நாடு' பத்திரிகையின் நேரு பரிசு திட்டத்தின் 1965-ஆம் வருஷப் பரிசளிப்பு விழா சென்னையில் நடந்தபோது, அந்தத் திட்ட நிர்வாகிகள் தாகூரையும் வள்ளத்தோலையும் அறிந்த அளவுக்கு பாரதியை அறியவில்லை என்பதை உணர முடிந்தது. அவர்கள் அன்று வெளியிட்ட சிறு நூலில் பாரதியின் பெயர் அப்பட்டமாக விட்டுப் போனது மட்டு மல்லாமல், அந்த விழாவில் அறிவிக்கப்பட்டபடி (இது பத்திரிகைச் செய்தியாகவும் 'ஹிந்து'வில் வந்திருக்கிறது) சோவியத் புத்தகங்கள் அடங்கிய நூலகம் தாகூரின் விஸ்வபாரதிக்கும், வள்ளத்தோலின் கேரள கலாமண்டலத்துக்கும் வழங்குவதாக பரிசளிப்புக் குழுவினர் தீர்மானித்துள்ளனர்,

இந்த அறிவிப்பைச் செய்தது, குழுவின் தென்பிராந்திய ஆலோசனைக் கழகத்தின் உதவித் தலைவர் என்று பார்க்கும்போது தென்பிராந்தியத்துக்காரருக்கு தாகூரைத் தெரிந்த அளவு பாரதியைக் தெரியவில்லை அல்லது தெரிவிக்க அவரை ஒட்டிய சாதனம் இல்லை என்பது வியப்பாக இருக்கிறது. இந்திய சோவியத் நல்லுறவுக்காகவும், சமாதானத்துக்காகவும் பாடுபட்டதைக் கௌரவிக்கும் நோக்கத்தின் விளைவே தாகூருக்கும் வள்ளத்தோலுக்கும் இந்தச் சிறப்பு என்று தெரிய வருகிறது. அப்படியானால் சமாதானத்துக்குப் பாடவில்லையா பாரதி? போராட்ட காலத்தில் பயங்கரச் சூழ்நிலையில் சமாதானத்தையும்சமரசத்தையும் பாடியது தானே பாரதியின் சிறப்பு? தனி மனிதனின் சக்தியையும் மனிதகுலத்தின் புது விழிப்பையும் இணைத்துப் பாடியது மட்டு மின்றி ரஷ்ய புரட்சி பற்றியே குறிப்பாகப் பாடியிருக்கிறான் பாரதி. இவ்வளவு இருந்தும், பாரதியின் பெயர் அந்த இடத்தில் விடுபட்டதற்கு ஒரே காரணம் தான் இருக்க முடியும் தாகூருக்கு விஸ்வபாரதியும் வள்ளத்தோலுக்கு கலாமண்டலமும் வாய்த்தது போல் நிரந்தர அமைப்பு ஏதும் இல்லாதது தான் பாரதிக்குக் குறை. கவியரங்கம் நடத்தி அவ்வப்போது சூடாக இருக்கும் பிரச்னைகளுக்குப் பாரதியின் பெயரில் தங்கள் விளக்கங்களை அளித்துத் திருப்தி கொள்ளும் கவிஞர் பட்டாளம் இது குறித்து இனியேனும் சிந்திக்கட்டும்.

மதுரையில் புதிதாகத் துவங்கும் பல்கலைக் கழகத்திற்குப் பாரதியின் பெயரைச் சூட்டவேண்டும் என்ற யோசனை பலமுனைகளிலிருந்து கிளம்பியும் அரசினர் கவனத்தை அது கவரவில்லை. தமிழ்க் கவியை அந்தப் பல்கலைக்கழகத்துடன் இணைத்துப் பார்க்க விரும்பவில்லை போலும். அரசினருக்கு அப்பால் மக்கள் பங்கும் இருக்கிறதே, பாரதியோடு நெருங்கிப் பழகிய பி. ஸ்ரீ. சென்னையில் நடக்கும் பாரதி விழாவுக்கு ஆங்கிலத்தில் வாழ்த்துச் செய்தி அனுப்புகிற மாதிரியான விசித்திரங்கள் குறைந்தாலே விமோசம் பிறக்கும்;

**சோதனைக் கூட்டம்**

'தானாக வாய்த்தால் தான் உண்டு' என்கிற நியதி இலக்கிய எழுத்துக்கு மட்டும் அல்லாமல், இலக்கியக் கூட்டத்துக்கும் பொருந்தும் போலும்,

பலநாட்களுக்குப் பிறகு இலக்கிய வட்டம் ஏற்பாடு செய்த கூட்டம் அப்படித்தான் நினைக்கத் தூண்டுகிறது, "இலக்கியத்தில் சோதனைகள்" என்கிற தலைப்பில், சுமார் இருபத்தைந்து பேரை வைத்து நடந்த கருத்தவை, இலக்கியக் கூட்டங்களுக்குக் கூட ஒரு சோதனை முன் மாதிரியாகவும் அமைந்திருந்தது.

மலையாள விமரிசகர் எம். கோவிந்தன் தலைமையில் க. நா. சுப்ரமண்யம். சிறு கட்டுரை ஒன்றைப் படிக்க, தொடர்ந்து பல எழுத்தாளர்கள் தங்கள் கருத்துக்களை வெளியிட்டார்கள். தெலுங்கு எழுத்தாளர் ஆஞ்சநேயலு ஹேமலதா ஆஞ்சநேயலு. மலையாள எழுத்தாளர் வி. பி. மேனன், ஓவியர் எம், பி. தேவர் தமிழ் எழுத்தாளர்கள் செல்லப்பா, சிட்டி, தி. ஜ. ர, அழகிரிசாமி, சி, மணி கே. எஸ். நாராயணசாமி மற்றும் பல இலக்கிய அன்பர்கள் தனிப் பேச்சாக இல்லாமல் அபிப்பிராய வெட்டுக்களை முன்வைத்ததுசுவையாகவும் பயனுள்ளதாகவும் இருந்தது. இப்படி மெருகேறியதற்குக் காரணம் அங்கு கலந்து கொண்டவர்களில் முழுநேர எழுத்தாளர் விமரிசகர் பத்திரிகையாளர் கல்லூரி ஆசிரியர்மொழிபெயர்ப்பாசிரியர் சிற்பக்கலைநிபுணர்கள் என்று பல ரகத்தவர் இருந்ததும் அவர்களது மைய முனைப்பு இலக்கியத்தை நோக்கி இருந்ததும் தான்,

இந்திய மொழிகளில் இன்றைய இலக்கியப் போக்கு கிட்டத்தட்ட ஒரே மாதிரி புதுத்தடத்தில் திரும்பி இருப்பதாகக் கருத்துக்கள் வெளிப்பட்டன, சமீபகாலத்திய படைப்புக்கள் மேலைநாட்டிலக்கியப்பாதிப்புக்குஆளாகியிருக்கிற அடிப்படை உண்மையை யாவரும் ஒப்புக் கொண்ட போதிலும். அந்தப் பாதிப்பின் அளவு இந்திய மொழிகளில் மாறுபட்டிருப்பதாகவும் தெரிய வந்தது. அந்தப் பாதிப்பின் விளைவாக புதிய முயற்சிகள் பரவலாக அனுஷ்டிக்கப்பட்ட காலகட்டமும் பலவேறு மொழிகளிலும் முன்பின்னாக அமைந்திருப்பது இன்னொரு தகவல்.

சோதனை என்றவுடன் இலக்கியத்தின் மற்ற துறைகளை விட 'கவிதையைப் பற்றியே பலரும் தொட்டு அதிக நேரம் பேசியது புதுக்கவிதையின் வேரூன்றிய ஆக்கத்துக்குச் சான்று பகர்ந்ததாகக் கொள்ளவேண்டும். தமிழில் . புதுக் கவிதை நிலையான துவக்கத்தைப் பெருவதற்கு முன்பே ஹிந்தியில் ஆரம்பம் பெற்றதாக ஒரு கருத்து வெளிப்பட்டது வளமான இலக்கியப் பழமை இல்லாத மொழி என்று இழித்துரைக்கப் படுகிற ஹிந்தியின் இந்தப் புது முயற்சிகள் பரிசீலிக்கப்பட வேண்டியவையே. சிறுகதை நாவல் இரண்டிலும் காணக்கூடிய சோதனைப் படைப்புக்கள் பரவலாக ஆராயப் பட்டாலும், நாடகத்தைப் பற்றி யாருக்குமே விவாதம் செய்யத் தோன்றவில்லை - ஒன்றுமே இல்லை என்கிற முடிவை மீறி

சோதனை பற்றிப் பேசும்போது மரபுபற்றிய சர்ச்சை எழுவதும் இயற்கைதான். புது முயற்சிகளில் இறங்குகிறவர்கள் பழைய இலக்கியப் பரிச்சயம் அற்றவர்கள் என்கிற வழக்கமான குற்றச்சாட்டும், அந்தக் குற்றசாட்டு பொருளற்றது, தேவையற்றது என்கிற மறுப்பும் சற்று அழுத்தமாகவே இடம் பெற்றன.

உருவம், உள்ளடக்கம் இவற்றை விட புதிய சொல்லாட்சி முக்கியம் என்கிற கருத்தும் வலியுறுத்தப்பட்டது. எழுத்துக்கு சொல் முக்கிய கருவியாக இருப்பதால் ஓவியம் சிற்பம் இவற்றினின்று இலக்கியம் மாறுபட்டது என்பது இன்னொரு கருத்து

இவ்வளவும் பரிமாறிக் கொண்ட பிறகு கேள்விகள் பிறந்தன. சோதனை மரபு இவற்றுக்கெல்லாம் என்ன பொருள்? மரபு மாற்றத்தையும், சோதனையின் வெற்றியையும் துல்லியமாக அளப்பதற்குத் திட்டமான கருவிகள் உண்டா? நவீன வாழ்க்கையின் வேறுபட்ட மதிப்பீட்டு அம்சங்கள் இலக்கியத்தைப் பாதிக்கிற தன்மையை உணருவதற்கு வழி என்ன? இந்தக் கேள்விகளின் சாரத்தையே தலைப்பாகக் கொண்டு அடுத்த கூட்டத்துக்கு ஏற்பாடு செய்வதாக ஒப்புக்கொண்டு, அனைவரும் கலைந்தனர்,

இலக்கியச் சிந்தனைகளுக்கும் கருத்துக்களுக்கும் அளவு கிடையாது, முடிவும் இல்லை. எனவே தொடர் கூட்டங்கள் நடத்துவது நியாயமான பலனை விளைவிக்கும். பல மொழிக்காரர்கள் ஒன்று கூடி இலக்கிய ஒப்பீடு காண வழி ஏற்பட்டால், திருப்பதி சத்திரத்தில் கூடிப் பிரிவதை விட உண்மையான திருப்தி உண்டாகும். நடந்து முடிந்த கூட்டம் நல்ல துவக்கத்தைச் செய்திருக்கிறதாக நம்பலாம்.

---

கன்னடம்

# ரகஸ்யம்

## டி. ஆர். பெண்ட்ரே

வாழையிலையை விட மென்மையான  
உன்தோலை நான் உற்றுப் பார்க்கையில்  
நெசவாளியின் திறமை ரகசியம் தெரிகிறது  
மழையைவிட அழகிய வண்ணமான (எனக்கு.  
உன் கண்களை நான் காண்கையில்  
ஓவியனின் ரகசியம் தெரிகிறது எனக்கு.  
போர்க் குதிரையின் நடைபோல கம்பீர மான  
உன் குரலை நான் கேட்கையில்  
பாடகனின் மர்மம் தெரிகிறது எனக்கு.  
தாமரை இதழ்களைவிட ஜாலமான  
உன் கை கால் விரல்களை, என்னை இழந்து  
பார்க்கையில்  
எல்லா கலையும்-தெரிகிறது எனக்கு.

(கே. ராகவேந்திர ராவ் இங்கிலீஷில்  
மொழிபெயர்த்ததிலிருந்து தமிழாக்கம்)

# இன்றையத் தமிழ் இலக்கியத்தில் சில போக்குகள்

க. நா. சுப்ரமண்யம்

தமிழ் மொழியில் நிறையவே எழுதப்படு கிறது. ஆனால் இப்படி வெளியாகிற எழுத்தில் பெரும் பகுதியை, சற்று அதிகமான பகுதியையே இலக்கியத்தரமானதாகக் கருதுவதற்கில்லை. இப் படிச் சொல்லுவது அதீத விமர்சனம் அல்ல ; சாதாரண விமர்சனம்தான். தமிழில் வெளியாவ தில் பெரும்பகுதி ஏன் இலக்கிய நோக்கிலிருந்து புறக்கணிக்கத்தக்கது என்று சொல்லவேண்டிய தாக இருக்கிறது என்று பொதுவாக வாசகர் களுக்குப் புரியாமல் இருப்பதில் ஆச்சரியமில்லை ; எழுத்தாளர்கள் என்று சொல்லிக் கொள்பவர் களில் பெரும்பாலோருக்கும் இது புரியவில்லைஎன் பதுபற்றிப் பீதி அடைய வேண்டியதாகவேஉளது.

மனித வாழ்வைச் சாத்தியமாக்குகிற மதிப் பீடுகள் பற்றியும், எந்த மதிப்பீடுகளை அடிப்படை களாகக் கொண்டு கலைஞர்கள் இலக்கியம் அமைக்கமுடியும் என்பது பற்றியும் உலகம் பூரா விலுமே இன்று பொதுவாக ஒரு குழப்பம் இருக் கிறது. இந்தக் குழப்பம் இந்திய மொழி இலக்கி யங்களில் சற்று அதிகமாக இருப்பதாகவே சொல்லவேண்டும். தமிழில் எழுதப்படுவதில் எது இலக்கியம், எது இலக்கியமில்லை என்பது தெரியா திருப்பதற்கு இந்தக் குழப்பம்தான் காரணம் என்று சொல்லலாம். இலக்கியத் தரத்தின் தன்மைகளும், விமர்சன அடிப்படைகளும் பற்றிய அறிவு தமிழில் வளராதது இலக்கிய ரஸனையை வெகுவாக பாதிக்கிறது.

இலக்கிய ரஸனைக்குத் தேவையான அடிப் படை அறிவுகளையும் தேர்ச்சியையும் தமிழ் வாச கனுக்கு அளிப்பதற்கு இதுவரையில் செய்துவரப் பட்ட முயற்சிகள் பலன் தரவில்லை என்றுதான் சொல்லவேண்டும். மூன்று காரணங்களால் இம் முயற்சிகள் பலன் தரவில்லை என்று எனக்குத் தோன்றுகிறது ; (ஒன்று) விமர்சனம் அதிதீவிர மானதாக இருக்கிறது, அதிகமாக வளராத ஒரு இலக்கியத்தில் இதற்குமேல் எதிர்பார்ப்பதற் கில்லை என்று சொல்லி விமர்சனத்தை அலக்ஷியப் படுத்திவிடுகிறார்கள். இலக்கிய விமரிசனத்தில் அதிதீவிரம், அதிகண்டிப்பு என்று ஒன்றுமே கிடையாது. கவிகள் என்றால், எம்மொழியில் எழுதியவர்களானாலும், எக்காலத்தவராயினும், டாண்டே, ஷேக்ஸ்பியர் போன்றவர்களுடைய சாதனையுடன் ஒப்பிட்டுப்பார்த்துத் தானாகவேண் டும்—இன்றைய சாதகர்களான பி. லால், டாம் மொரேயஸ், நிஸ்ஸிம் எஸக்கியல் என்பவர்களு டன் ஒப்பிட்டால் போதாது ; நாவலாசிரியர்களா னால் அவர்களை டாஸ்டாவ்ஸ்கி, டால்ஸ்டாய், ஸெல்மா லாகர்லெவ் இவர்களைப் போன்றவர் களின் சாதனைகளுடன் ஒப்பிடவேண்டுமே தவிர இன்றைய வெற்றிகளான (?) ஆர். கே. நாராயண், குஷ்வந்த் ஸிங், கமலா மார்க்கண்டேயா என்பவர் களுடன் ஒப்பிட்டுப்பார்த்து "பாதகமில்லை" என்று சொல்வது சரியல்ல. (இரண்டு) இலக்கி யத்தில் இரண்டாந்தரமானது. மூன்றுந்தர மானது இவற்றுடனேயே திருப்தியடைந்து விடுகிற ஒரு பழக்கத்தை தமிழர்கள் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். முதல் தரமானதை நாட வேண்டும் என்கிற நினைப்பே அவர்களுக்கு இல்லை. இப்படிச் சொன்ன உடனேயே முதல் தரமானது எது, அதை யார் தீர்மானிப்பது என்று பலரும் கூடிக் கூச்சல் போடுகிறார்கள். அது ஜனநாயக முறையில் கூச்சல் போட்டு வோட்டுப் போட்டு முடிக்கிற காரியம் அல்ல ; விஷயம் அறிந்த விமரிசகனும் காலமும் கூடிச் செய்யவேண்டிய காரியம் அது என்று அவர்களுக்குத் தெரிவதில்லை. (மூன்று) மற்றக் காரியங்களில் போலவே இலக்கி யத்திலும் இலக்கிய விமரிசனத்திலும் ஐரோப்பிய மவுசுகளைப்பின்பற்றி விட்டால் போதும், ஆவது செய்துவிட்டோம் என்கிற நினைப்பு நம்மவர் களுக்கு ஏற்பட்டு விடுகிறது. இந்திய மொழி இலக்கியங்கள் சற்றே பந்தயத்தில் பின்னடைந் தவை அவற்றைத் தீவிரமாக மதிப்பிடாமல், ஏதோ சுமாராக ஐரோப்பிய அளவு கோல்களு டன் ஒப்பிட்டுவிடாமல் பார்த்துக்கொண்டால் போதும் என்கிற நினைப்பும் இருக்கிறது. எல்லா வற்றிற்கும் மேலாக, இலக்கிய விமர்சனத்தை அலக்ஷியப்படுத்தும் மனப்பான்மையும் இருக் கிறது. இலக்கிய விமர்சகனைத் தோற்றுப்போன படைப்பாளி என்று ஏளனம் செய்து ஒதுக்கிவிட முயலுவது நடைபெற்றுக்கொண்டே இருக்கிறது. எல்லா இலக்கியப் படைப்பு முயற்சியிலுமே ஒரு விமரிசன அம்சம் அடங்கியுள்ளது என்பதைத் தமிழர்கள் மறந்துவிடுகிறார்கள். இந்த விமர்சன அம்சம் வெளிப்படையாகவும் இருக்கலாம்,, உள் அடங்கியும் இருக்கலாம்

இன்றையத் தமிழ் இலக்கியப் போக்குகளைச் சொல்ல வருகிற நான் இன்று விமரிசனப் போக்கு இல்லாமையை முதலில் குறிப்பிடுவது நியாய மான காரியமேயாகும். இன்றைய தமிழ் எழுத் துக்கு ஆதாரமாக உள்ளது இந்த விமரிசன மனப் பான்மை இல்லாததேயாகும். தமிழில் விமரிசனம் செய்ய முற்படுபவர்களிடையேயும் பின்வரும் குறுதிசயங்களைக் காணலாம் ; ஒரு பாட்டு, கதை

அல்லது நாவலை அலசிப்பார்க்கிற காரியம் இருக்கிறதே அது போதுமான இலக்கிய அறிவோ பயிற்சியோ இல்லாத அளவில் நடப்பதையும் காண்கிறோம். (இது தமிழில் போலவே மற்ற மொழிகளிலும் காணக்கூடிய ஒரு குறைபாடு தான்.) தமிழ் இலக்கியங்கள் மட்டுமின்றி உலக இலக்கியத்திலும் அவசியமான அளவுக்குத் தேர்ச்சியிருந்தாலொழிய ஒரு நூலை அதேபோன்ற இன அளவில் அதே அளவுள்ள மற்ற நூல்களுடன் ஒப்பிட்டுப்பார்ப்பது (ஹென்ரிஜேம்ஸ் சொன்னது போல) சாத்தியமில்லாது போகிறது. அலசல் விமரிசனம் செய்ய முன்வருபவன் இன்றைய அறிவுத்துறைகள் பலவற்றிலும் பிரக்ஞையுள்ளவனாக இருக்கவேண்டும். மனோதத்துவ, சமூகவியல், மற்றும் பல அறிவுத்துறையில் நமது வளர்ச்சி போதுமானதாக இல்லை. இன்றுள்ள நிலையில் இந்தத் துறைகளில் போதுமான பிரக்ஞை பெற்ற விமரிசகர்கள் நம்மிடையே கிடைக்காது என்பது வெளிப்படை. வேறு சில தமிழ் விமரிசகர்கள் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தையும், பாதிப்பையும் விட்டு வெளிவர மறுக்கிறார்கள். உதாரணமாகத் தமிழில் சிறுகதை வளர்ந்திருக்கிற அளவு நாவல் வளரவில்லை என்று சொல்லப்படுகிறது; இது இருபது ஆண்டுக்கு முந்திய ஒரு காலகட்டத்தில் உண்மை; இன்றோ சிறுகதை தேங்கிவிட்டது -- நாவல் வெகுவாக முன்னேறி வருகிறது என்பதை நிரூபிக்கவே முடியும். சமூகவியல் பற்றிய அரைகுறையான அறிவுடன் இலக்கியத்திலிருந்து பலவித கோட்பாடுகளைக் குறிப்பிட்டுக் காட்டும் போக்குத் தமிழிலே காணப்படுகிறது; இந்தக் கோட்பாடுகள் அப்படி ஒன்றும் நிரந்தரமானவையோ, நிச்சயமானவையோ அல்ல. மேலை நாட்டு ஸ்லோகங்களை அர்த்தம் தெரியாமல் ஏற்றுக்கொண்டுவிடுகிற பழக்கமும் நமது விமரிசகர்களிடையே காணப்படுகிறது. மரபு தவறாத விமரிசகன், ஸஹ்ருதய "ஸ்நாப்" (ஸ்நாப் என்பவன் ராங்கிக்காரன்—தானும் கவியைப்போலவே முக்கியமானவன் என்று மார்தட்டிக்கொண்டு குழப்பம் விளைவிக்கும் ரஸிகன்) முதலியவர்களும் இருக்கிறார்கள். கைதட்டத் தயாராக, மாலையுடன் காத்திருக்கும் கோஷ்டிக்காக மாலைவேளைகளில் ஓயாது வார்த்தைகளைக் கொட்டுகிற காலக்ஷேப விமரிசகர்களும் இருக்கிறார்கள். புறநானூறுப்பாட்டில் விரிக்கையும், கம்பனில் மில்டன் காவியத்தையும் (பாவம் கம்பன்! பாவம் மில்டன்!) சோஷலிஸ யதார்த்தவாதத்தை பாரதியிலும் காண்கிற பேராசிரிய விமரிசகர்கள் கல்லூரி (டௌடாவன்ஞ) விமரிசகர்கள் இருக்கிறார்கள்; சங்ககாலத்து வாழ்வை லக்ஷிய வாழ்வாகவும், தமிழன் உயர்ந்தது வடநாட்டு மன்னன் தலையில் கல்லேற்றிக் கொணர்ந்தபோதுதான் என்றும் சொல்கிற விமரிசகர்கள் இருக்கிறார்கள். மூன்று சங்கங்களைப் பற்றிக் கதைத்துக் கொண்டே, மூன்றாவது கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே என்ற நக்கீரன் — ஆஹா என்கிற விமரிசகர்களும் இருக்கிறார்கள். யாரோ சொன்னதை மறுத்துச் சொல்லிப் பெரியவனாகப் பார்க்கிறவர்களும் உண்டு; க. நா. சு. இப்படிச் சொன்னார், ஆகவே இதுதான் சரி என்று சொல்லித் தங்களுக்குப் பெருமை தேடிக் கொள்கிறவர்களும் தமிழர்களில் இல்லாமல் இல்லை; பத்து ஆண்டுகளாகவே இந்தத் தொழில் மும்முரமாக நடந்து வருகிறது.

இது நம்பிக்கை தருகிற நிலைமையல்ல எனினும் அவ்வளவு ஒன்றும் முழுமோசமான நிலைமையும் அன்று. பழசுபற்றிய மதிப்பீடுகளை இன்று செய்கிற காரியம் துரிதமாக, முழுமையாக நடக்கிறது என்று சொல்லமுடியாவிட்டாலும், ஓரளவுக்கு நடக்கிறது. புதுசைச் சரியான முறையில் வளர்க்கப் பழசை சரிவர மதிப்பிடும் காரியம் செய்தாகவே வேண்டும். பழசைச் சரியானபடி மதிப்பிடுவதற்குக் குறுக்கே நிற்பவர்கள் பண்டிதர்களும் பேராசிரியர்களும் தான் — அவர்களுடைய அறியாமையை வார்த்தைகளில் சொல்லி மாளாது. 'நாச்சுரலிஸம்' என்றால் நேச்சர் பற்றி எழுதுவது என்றும், 'ஸ்ட்ரீம் ஆப் கான்ஷியஸ்நெஸ்' என்பது ஒரு இலக்கியத்துறை என்றும் (தவறாக) எண்ணுபவர்கள் இந்தப் பண்டிதர்களிடையிலும் பேராசிரியர்களிடையிலும் அதிகம். விமரிசன அறிவு சிறிதும் இராத இந்தப் பேராசிரியர்கள் விமரிசனம் செய்ய முன்வரும்போது விளைகிற விளைவுகள் சிரிப்புக்கு இடமாகின்றன. இதோ ஒரு பேராசிரியர் கூறுகிறார்—நற்றிணையின் கதாநாயகி மரத்தைக் கண்ணீர்விட்டு வளர்த்தாள்—உங்கள் சகுந்தலை வெறும் தண்ணீர் விட்டே வளர்த்தாளே—எங்கள் தமிழ் எவ்வளவு சிறப்பானது என்று மார்தட்டுகிறார் பேராசிரியர். மரம் பட்டுப்போயிருக்கும் கண்ணீர் விட்டிருந்தால் — கவிதை உயர்ந்துவிட்டது அதனால் என்று கூறுகிறார் விமரிசகர்.

பழசை விமரிசன நோக்குடன் பார்ப்பது இல்லை; புதுசையும் விமரிசனக் கண்ணுடன் பார்க்கமாட்டேன் என்கிறார்கள். அதனால் தமிழ் இலக்கியம் தேங்குகிறது தமிழ் இலக்கியம்பற்றி இலக்கிய விமரிசன ரீதியில் ஒரு சரித்திரம் (வரலாறு) கூட இல்லையென்பது பெருமைப்பட வேண்டிய விஷயம் அல்ல. பாரதி போன்ற கவியைப்பற்றி விமரிசன ரீதியில் கணிக்கிற நூல் ஒன்றுகூடத் தமிழில் இன்று இல்லை என்பது பெருமைப்படக் கூடிய விஷயமா? கம்பன் அல்லது இளங்கோவைப்போல பாரதியும் அவ்வளவு பெரிய கவியா? இன்று இல்லை என்று சொல்லி பொதுஜன விரோதத்திலிருந்து தப்பிவிடமுடியாது. பாரதியின் கவிதை, கல்கியின் வசனத்தைப்போல, எந்த அளவுக்கு பத்திரிகை எழுத்து எந்த அளவுக்கு இலக்கியம் என்று இன்னமும் மதிப்பிடப்படவில்லை. இந்தமாதிரிக் கேள்விகளைக் கேட்டு பதில் தருகிற அளவுக்குத் தமிழ் வளர இன்னும் பத்து ஆண்டுகளுக்கு மேலும் ஆகலாம்.

தமிழின் இன்றைக் காலம் என்பது சென்ற முப்பது வருஷங்களாக உருவானது. கல்கி பொழுதுபோக்கு (காலக்ஷேப) அம்சத்தை வற்புறுத்தினார்; அதை எதிர்த்து மணிக்கொடி

கோஷ்டியினர் என்று கூறிக்கொண்டவர்கள் கன அம்சத்தை வற்புறுத்தினர்கள். இந்தக் கால கட்டத்தில் சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள் இலக்கிய விமரிசனம், ஏதோ சில ஜீவிய சரித்தி ரங்கள், புதுக்கவிதை, பிரயாணக் கட்டுரை, எழுத்துத்துறையில் வேறு பல கட்டுரைகள் தோன்றியுள்ளன. இவையெல்லாம் இன்னும் விமரிசன ரீதியாக மதிப்பிடப்படவில்லை. பல நல்ல எழுத்தாளர்கள் மறைந்துவிட்டார்கள். புதுமைப்பித்தன், கு.ப. ராஜகோபாலன் எஸ்.வி. வி. மூவரும் நல்ல தரமான இலக்கியம் செய்தவர் கள், இறந்துவிட்டார்கள். சிறுகதைகள் பல சிறப் புடன் எழுதிக் காட்டிய மௌனியைப் பாராட் டாததால், அவர் பின்னர் எழுதுவதையே நிறுத்திவிட்டார். அவர் எழுதியுள்ள 15 சிறு கதைகள் இன்றுள்ள கதைகளில் மிகமிகச் சிறப் பானவை. ந. பிச்சமூர்த்தியின் எழுத்து மூன்று தனிக் காலக்கட்டங்களாகப் பிரிபடுகிறது. ஆரம் பத்து வேகம் இரண்டாவது காலகட்டத்தில் முழுதும் மறைந்துவிடாமல் கனம் அற்றது எனி னும் மூன்ருவது கட்டத்தில் உருவம் ஆழம் அமைதி என்று உருப்பெற்றது. தமிழில் சில சிறப்பான சிறுகதைகள் அவருடைய மூன்ருவது காலகட்டத்தைச் சேர்ந்தவை. அவர் இலக்கிய மரபுக் கவிதை, மரபு மீறிய கவிதை இரண்டிலும் சோதனை செய்து பார்த்தார்; முப்பது ஆண்டு களில் அவர் செய்த சோதனைகள் பல; மரபுக்கு ஒத்த விஷயங்களை மரபுக் கொவ்வாத வகையில் கவிதைசெய்து தந்துள்ளார் அவர். சங்கரராம் போன்ற நாவலாசிரியர்கள் தங்கள் முதல் நாவ லில் தங்களிடம் உள்ளதில் இருந்ததைத் தந்தவர் கள்—பிறகு அதையே போட்டுத் தங்கள் மற்ற நாவல்களில் நச்சுப்படுத்திக் கொண்டிருக்கிருர் கள். லா. ச. ராமாமிருதமும் தனது உத்தியைக் சிறப்புச் செய்து காட்டும் வகையில் பல சிறுகதை கள் வரிசையாக எழுதியுள்ளார். சமீபகாலத்தில் அவர் எழுதியதையே திரும்பத் திரும்ப எழுதுவ தாக ஒரு நினைப்பு ஏற்படுகிறது. அவருடைய முதல் நாவல் முதல் பாகம்தான் வந்திருக்கிறது; முற்றுப்பெறவில்லை; அதற்குள் முடிவாக அபிப் பிராயம் சொல்லுவது சரியல்ல. நாற்பதுக் களின் ஆரம்ப ஆண்டுகளில் ஆர். ஷண்முகசுந்த ரம் மூன்று நல்ல நாவல்கள் எழுதினர்; அவை வாசகர்களை எட்டியும் உற்சாகப்படுத்தாதனல் அவர் மொழி பெயர்ப்புத்துறையில் அதிகமாகக் கவனம் செலுத்தினர்; ஆனல் 1958 க்குப் பிறகு மீண்டும் சில நல்ல நாவல்கள் எழுதியுள்ளார். அவருடைய 'அறுவடை', 'சட்டி சுட்டது' இரண் டும் தமிழில் உள்ள நாவல்களிற் சிறப்பானவை. தி. ஜானகிராமன் தனது சிறுகதைகள் சிலவற்றி லும், ஒரு நாவலிலும் (மோகமுள்) ஒரு லேசான கிண்டலுடன் எழுதியுள்ளார். மற்ற நாவல் களிலும் சமீப காலத்திய அவர் சிறுகதைகளிலும் அவற்றின் நிழல் தான் லேசாகத்தட்டுப்படுகிறது. சிதம்பரசுப்ரமண்யன் ஆரம்ப காலத்திய பல நேர்த்தியான சிறுகதைகள் எழுதினர்—மரபு பிசகாத உருவம் பெற்றவை அவை; ஐம்பதுக் களின் ஆரம்பத்தில் 'இதய நாதம்' என்று ஒரு நாவல் எழுதினர். அதிலே ஆழமும் உண்மையும் இருக்கிறது. உத்தி இல்லாவிட்டாலும், குரலை உயர்த்தாமலே அழகிரிசாமி பல நல்ல கதைகளை எழுதியுள்ளார்; அவரது சமீப காலத்திய எழுத்து திருப்தி தருவதாக இல்லை.

இருபது ஆண்டுகளாக சிறுகதையின் போக்கு பத்திரிகைத்தரம், கெட்டிக்காரத்தனம்; கண்ணீர் உருக்குதல், பழகியதைத் திருப்பிச் சொல்லல், புது சாக எதுவும் செய்யாமை என்கிற தடத்திலேயே, பத்திரிகைத் தேவைக்காக செல்லத் தொடங்கி விட்டது. அதிகமாகச் சிரமப்படுத்தாத, சிந்திக்க வைக்காத சிறுகதைகள் வேண்டும் என்று பத்தி ரிகைத்தேவை வரையறை ஏற்படவே சிறுகதை தேங்கிவிட்டது வேறு சிறுகதைகளை வெளியிட இடம் ஏற்படவில்லை நாவல்கள் தொடர் கதை கள் ஆகிவிட்டன பத்திரிகைத் தேவையினுல்; ஒவ்வொரு அத்தியாயமும் உச்சகட்ட சுவாரசி யத்தை ஒட்டித் தொட்டாகவேண்டும் என்கிற நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இல்லாவிட்டால் எங்கும் இல்லாத ஒரு சரித்திரத்தில் தப்பிவிட வேண்டும். உணர்ச்சி வசப்பட்ட சிவாஜி கணேசன் தொண் டைப்பேச்சு வேகம் நாவலில் தென்படத் தொடங்கியது. பேராசிரியர் வரதராஜன் போன்றவர்கள் நாவல்கள் எழுதத் தொடங்கிய போது குறளின் செய்யுளைச்சுற்றி போதனை செய்ய முற்பட்டார்கள்; அவர் கதாநாயகநாயகிகளின் பெயர்கள்கூட ஊரில் இல்லாததாக இருந்தது. பத்திரிகைகளின் பக்கங்களில் அல்லாமல் வெளியே தான் நல்ல நாவல்கள் எழுதப்பட்டன. சிறு கதைக்கு பிரசுரத்துக்கு வேறு இடம் கிடைக்காத தால் அது தானுக இறந்துவிட்டது. ஐம்பதுக் களில் தோன்றிய நல்ல கதாசிரியர்கள் என்று ஜெயகாந்தன், சுந்தரராமசாமி இருவரையும் சொல்லலாம்; ஆனல் ஜெயகாந்தன் ஆரம்பத்தில் சில நல்ல சிறுகதைகளை எழுதிவிட்டுப் பின்னர் பத்திரிகைத் தேவைகளுக்கு பலியாகிவிட்டார். சுந்தரராமசாமி அதிகம் எழுதாததால் பலியாகா மல் தப்பியிருக்கிருர் என்று சொல்லலாம். ஆனல் அவருடைய சிறந்த சிறுகதை இனிமேல்தான் எழுதப்படவேண்டும். சுந்தரராமசாமியின் நாவ லின் (புளியமரம்) பல பகுதிகளை நான் படித்து விட்டேன்; ஆனல் முழு நாவலும் கண்முன் இல்லாதபோது அபிப்பிராயம் சொல்வது விமரி சனமாகாது.

கிருத்திகாவின் முதல் நாவல் திருப்திதருவதாக இல்லை. ஆனல் அவருடைய ஸத்யமேவ 'ஜயதே' தமிழர்களுக்குப் பழகாத ஒரு பகைப்புலத்தை விவரிக்கிறது. அது ப்ராவர் ஜாப்வாலா, நயன் தாரா ஸேகல் இருவருடைய டில்லி உலகம்; மூன்ருவது நாவல் 'கூண்டுக் கிளி'யில் தன்னுடைய சிறந்த நாவலை அவர் எழுதியுள்ளார் என்று சொல்லத் தோன்றுகிறது. மணிக்கொடி காலத் தில் கண்ணீர் வரவழைக்கும் குடும்பக் குழந்தைக் கதைகளை எழுதத் தொடங்கிய சி. சு. செல்லப்பா பின்னர் சில சுவையான சிறுகதைகள் எழுதியுள் ளார். நல்ல கதைகள் எனினும் நுணுக்க விவரங்

கள் இவற்றில் சற்றே அதிகம்: அவருடைய சிறு நாவல்களான 'வாடிவாசல்' 'ஜீவனும்சம்' இரண்டையும் வைத்து நோக்கும்போது அவர் இன்னமும் நமக்கு ஒரு நல்ல நாவலை சிருஷ்டித்துத் தரக்கூடும் என்று தோன்றுகிறது; அவர் தருகிற விவரங்கள் சற்று அதிகம்தான். அந்த விவர கனத்தில் கருத்தும் சம்பவமும் உருக்குலைந்து விடுவதாகத் தோன்றுகிறது என்னுடைய நாவல்களில் பலவும் பத்திரிகைகளில் வராமல் நாவல்களாகவே எழுதப்பட்டவை—எனக்கு உத்திகளில் சோதனை செய்து பார்ப்பதில் ஆவல் அதிகம்; கருத்திலும் சோதனை செய்வேன், ஆனால் நோக்கிலே நான் மரபுவாதி தான்.

சிறுகதையைப் பற்றிப் பேசுவது தமிழர்களிடையே வழக்கமாகிவிட்டது எனினும் நாவலில் தான் வளர்ச்சி அதிகம் இருக்கிறது என்று சொல்ல வேண்டும். 1960க்குப் பின் வந்த பல முதல் நாவல்கள் திருப்தி தருபவையாக இருக்கின்றன. இந்த நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் சக்தி வாய்ந்ததாக இருந்த நாடகம் முப்பதுக்களுக்குப் பிறகு தேய்வடைந்துவிட்டது. கேலிக் கூத்துகளுடனும், திருட்டுச் சரக்குடனும் தமிழ் நாடகம திருப்தியடைந்துவிடுகிற மாதிரித் தெரிகிறது. ஜீவிய சரித்திரத் துறையும் வெகுவாக முன்னேறிவிடவில்லை—டாக்டர் சாமிநாதையருடைய குருவின் சரித்திரம் நல்ல ஆரம்பம்; பின்னர் சந்திரசேகரன் தன் தகப்பனாரின் ஜீவியத்தை எழுதினார். ஜீவிய சரித்திரத்தையும் தொடர் சரித்திரமாக எழுதிப் பார்க்கிற பத்திரிகை எழுத்துச் சோதனை கணபதியின் சங்கரர், விவேகாநந்தர் முயற்சியாகப் பரிமளித்துள்ளது. அவற்றை இலக்கியமாகக் கருதுவதற்கில்லை. இலக்கிய விஷயங்கள் பற்றிய சில எழுத்தாளர்களுடைய கட்டுரைகள் தவிரத் தமிழில் வேறு நல்ல கட்டுரைகளே கிடையாது. ஏ. கே. செட்டியார் ஆரம்பகாலத்தில் எழுதிய பிரயாணக் கட்டுரைகள் தவிர மற்ற தமிழ்ப் பிரயாணக் கட்டுரைகள் இலக்கியத் தரத்தை எட்டவேயில்லை.

பாரதிதாஸனின் கட்சிச் சண்டைக் கவிதை, எஸ். டி. எஸ். யோகியாரின் பிரசங்கக் கவிதை, தேசிக விநாயகம் பிள்ளையின் சுலபக் கவிதை நாமக்கல் ராமலிங்கம் பிள்ளையின் வசனமேயான கவிதை என்று தமிழ்க் கவிதை பல மட்டமான கட்டங்களைத் தாண்டி பாரதியாரின் சோதனைக் கவிதைகளைக் கணித்துக் காண்கிற அளவிற்கு வளர்ந்துள்ளது. புதுமைப்பித்தன், கு. ப. ரா. இருவரும் செய்த கவிதைச் சோதனைகள் அளவில் சொற்பமானவை-தரத்தில் உயர்ந்தவை. சென்ற பத்து ஆண்டுகளாகத் தமிழில் புதுக் கவிதை முயற்சி உருப்பெற்று ஓங்கிவந்துள்ளது. சுந்தர ராமசாமி, டி. கே. துரைஸ்வாமி, மயன், தர்மூ சிவராமு, தி. சோ. வேணுகோபாலன் போன்றவர்கள் இருபது பேருக்கும் அதிகமாகப் புதுக் கவிதை எழுதுகிறார்கள்—கவிதைத் தரம் எட்டாவிட்டாலும் இச்சோதனை பலனளிக்கும் என்றே தோன்றுகிறது.

இலக்கியத்தரமான போக்குகள் என்று தமிழில் சொல்லக் கூடியவை இவைதான். இந்தியாவில் பல மொழிகளிலும் பகுதிகளிலும் பத்திரிகை அதே தரமானதைத்தான் உண்டாக்குகிறது-எல்லோருக்கும் தெரிந்ததை மீண்டும் இங்கு சொல்ல நான் விரும்பவில்லை. பத்தாயிரம் இருபதினாயிரம் என்று பரிசு பெற்ற ஒரு பத்திரிகை நாடகம், அந்த நாடக ஆசிரியரும் பத்திரிகைப் பிரசுர கர்த்தரும் சேர்ந்து உருவாக்கிய திருட்டு என்று சட்டப்படி ஒரு ஹைகோர்ட்டில் தீர்ப்பளிக்கப்பட்டது. எல்லாப் பத்திரிகை எழுத்துக்களும் இதே நிலைதான் என்று நான் சொல்லவில்லை—நிதானிக்க ஒரு வழிகாட்டி இது என்று கூறுகிறேன். குமுதம், ஆனந்தவிகடன், கல்கி, ராணி, கலைமகள், போன்ற பத்திரிகைகள் நம்மிடையே அதிகம் விற்பனையாகின்றன என்பதற்கு ஒரேஅர்த்தம் தான் உண்டு; தமிழர்களுக்கு அறிவுக் கூர்மை மிகவும் குறைவு என்பதுதான் இந்தப் பத்திரிகைகள் அதிகம் விற்பனையாகின்றன என்பதற்கு அர்த்தம்; இலக்கியத் தரமானதை ஏற்றுக்கொள்ளக் கூடியவர்கள் நம்மிடையே அதிகம் பேர் இல்லை என்பதையே இது குறிக்கிறது இதைவிட மட்டமாக ரஸனை போகாது என்றும் சொல்லிவிட முடியாது; புதுசாக வருகிற ஒரு பத்திரிகை ரஸனை அழிப்பில் இவற்றை மிஞ்சாவிட்டால், அது விற்பனையாகாது. இலக்கிய ரஸனையைக் குறைக்கிற காரியத்தை இந்தப் பத்திரிகைகள் போட்டி போட்டுக்கொண்டு வெற்றிகரமாகச் செய்துவருகின்றன

தமிழில் பேராசிரியர்களோ தங்கள் கையை விட்டு நழுவுகிற ஏதோ ஒரு உருப்படியற்ற பழசைக் கட்டித் தழுவிக்கொண்டிருக்கிறார்கள். இன்று தமிழில் கல்வி என்பது நல்ல அலங்காரம் செய்து சாத்திவைக்கப்படும் பிணமாகக் காட்சியளிக்கிறது.

இன்று நாம் நமது இலக்கியத்தைப் பார்க்கிற பார்வை எந்தப் பழமையையும் விடப் பிரமாதமானதாக நமது எதிர்காலம் அமைவதற்கான வழியில் இருக்கவேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்படவேண்டிய விஷயமாகும். நமக்கு உபயோகப்படுகிற அளவுக்கு மேலை நாடுகளிலிருந்து நாம் கருத்துக்களை எடுத்துக்கொள்ள வேண்டும். விமர்சனக் கருத்துக்கள் முக்கியமான தேவை. நம்மை அடிமைப்படுத்தி ஒண்டுக் குடித்தனமாக வைத்திருக்கிற மேலை நாட்டு கருத்துக்களை மட்டும் அறிந்தவர்களாக நாம் இன்று இருக்கிறோம். இதை சுயப்பிரக்ஞையுடன், தெரிந்து மீறி எழ வேண்டும். தமிழன் முழுமையான ஒரு உலகத்தைத் தேடிக் கண்டுகொள்ளவேண்டும். அந்த உலகம் பிரிட்டிஷ் உலகம் மட்டும் அல்ல. ருஷ்யர்களும் ஸ்காண்டிநேவியர்களும், இஸ்பானியர்களும், இத்தாலியர்களும் பிரெஞ்சுக்காரர்களும் ஜெர்மானியர்களும், கிரேக்கர்களும் தென் அமெ

(43—ஆம் பக்கம் பார்க்க)

# தற்கால தமிழ் இலக்கியம்

## —தனி மனிதர்களின் சாதனைகள்—

### சி. சு செல்லப்பா

நிகழ்காலத்து தன்மொழி இலக்கிய நிலைபற்றி துல்யமாக மதிப்பீடு செய்யமுயல்வது ஒருவருக்கு எளிது இல்லை. பொதுப்படையாக சொல்ல முயற்சிப்பதும் அபாயகரமானது. தாங்கள் உணர்வதையும் நினைப்பதையும் வெளியிட முன் வரும் ஆழிய கருத்துடமை வாய்ந்த, சிந்திக்கும் தனி நபர்களால்தான் இலக்கியப் போக்குகள் நிதானிக்கப்படுகின்றன. இந்த உணர்கிற தன்மை உள்ள தனி மனிதர்கள், முன் ஓடின சிந்தனைப் பாங்குகள் மட்டுமின்றி, வெளியீட்டு முறை, விதம் இவைகளிடையேயும் ஊடுருவிச் செல்ல முயல்வது மட்டுமல்லாமல், தாங்கள் உணர்ந்ததை தாங்களே செயலில் காட்டி, மற்றவர்கள் பின்பற்ற சுவடு பதிக்கிறார்கள். இந்த தனி மனிதர்களின் தனித்த பார்வைகள், தங்களுக்கு முன் சென்றவர்கள் நிர்ணயித்திருந்த மதிப்புகளுக்கு எதிராக தாங்கள் கருதும் மதிப்புகளை ஏற்படுத்த அவர்கள் செய்யும் முயற்சிகளின் விளைவு முன்னோர்கள் விதித்துள்ளவை தனி மனித முன்னேற்றத்தையும் தனித்தன்மை வளர்ச்சியையும் தடைப்படுத்துவதாக அவர்கள் கருதுகிறார்கள். இந்த ஆரம்பக்காரர்களுக்கு பின் தொடர்பவர்கள் சிலர் கிடைக்கிறார்கள். அவர்களைப் போலவே மனோபாவம் கொண்டு, ரசனையும் நுண்ணுணர்வும் வாய்ந்து, அப்படியே அவர்களை இமிடேட் பண்ணாமல், தங்கள் அநுபவமும் புலப்பாடும் தங்களுக்கு எப்போது எந்தவிதமாக திறன் அளிக்கிறதோ அதுக்கு ஏற்ப, கலைப்பாங்கான வெளியீட்டுக்கும் குறிப்பிடத் தக்க மதிப்புகளுக்கும் உரிய ஒரு தனிப்பட்ட சூழ்நிலையை உண்டாக்குவதில் சேர்ந்து கொள்கிறார்கள். இதைத்தான் பின்னால் அளவிட முற்படும் ஒருவர், ஒருவித போக்கு என்று சுட்டிக்காட்டுவது. இதை மனதில் கொண்டு தமிழ் மொழியில் நாவல், சிறுகதை, கவிதை, விமர்சனம் ஆகிய துறைகளில் காணப்படும் போக்கு பற்றி கொஞ்சம் ஓட்டமாகவே குறிப்பிட விரும்புகிறேன்.

முதலில் நாவலை எடுத்துக்கொள்வோம். ஏனென்றால் தமிழ் இலக்கியத்தில் 'மறுமலர்ச்சி, அதாவது படைப்புச் செயலில் தற்கால நோக்கு, சென்ற நூற்றாண்டின் கடைசி முப்பதாண்டுகள் காலத்தில் மூன்று தனிமனிதர்களால் தமிழ் இலக்கியத்துக்கு புதுசாக அறிமுகப்படுத்தப்பட்ட நாவல் துறையுடன்தான் ஆரம்பிக்கிறது. வேதநாயகம்பிள்ளையின் நாவல் 'பிரதாப முதலியார் சரித்திரம்' முதலில் தோன்றியது ஆனாலும், திட்டமிட்ட நாவல் உருவம் கொண்டிருப்பதைவிட ஒரு 'ரோமன்ஸ்' வகையை சேர்ந்ததும் ஒரு 'கிரானிகிள்' என்ற கருத்துப்படக்கூடியதாகவும் இருப்பதாலும் இலக்கியத்தரமான நாவல் கலைக்கு பங்கு செலுத்தி இருப்பதாக சொல்லமுடியாது. ஆனால் வேதாந்தி பி. ஆர். ராஜம் அய்யரின் 'கமலாம்பாள் சரித்திரம்' சமூக சீர்திருத்தவாதி அ. மாதவையாவின் 'பத்மாவதி சரித்திரம்' ஆகிய மற்ற இரண்டும் நாவல் இலக்கியம் உருவாக காரணமாக இருந்தவை என்று சொல்லலாம் இரண்டும் குடும்பத்தை பின்னணியாகக் கொண்டு நடப்பியல்பாங்கான சொல்வழியில் அமைந்தவை. கமலாம்பாள், 'இவ்வுலகில் உழன்று தவிக்கும் ஒரு அமைதியற்ற ஆத்மா பல கஷ்டங்களை அனுபவித்து கடைசியாக நிர்மலமான ஒரு இன்பநிலை அடைந்ததை சித்தரித்து, தன் சூழ்நிலையோடு மனிதனுக்கு ஏற்படும் போராட்டத்தில் தனக்குத் தானே பிரச்னைகளுக்கு தீர்வு காணவேண்டிய ஒருவனாக அவனை நடத்துகிறது பத்மாவதியோ, தனிமனிதனை தன் இரையாக, தன்மூப்பான அதிகாரம் செலுத்தி ஆக்கிக்கொள்ளும் சமூக நிலைமைக்கு முக்யத்வம் கொடுத்து அவனுடைய திக்கற்ற நிலைமையை வலியுறுத்தி தனி மனிதனுடைய பிரச்னைகளை சமூகம் அவனுக்காக தீர்க்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறது. அமைப்பு சம்பந்தமாக இரண்டும் செல்லக் கூடியவை, ஏன், முதல் முயற்சிகள் என்பதுக்காக மதிக்கத்தக்கவை என்றுகூட சொல்லலாம்.

இந்த இரண்டும் இதுவரை இல்லாத ஒரு புதுப்பாதை வகுத்தாலும், உடனே அவை பின்பற்றப்பட்டனவா? ஆமாம் என்று சொல்ல எனக்கு தயக்கம்தான். ஒரு கால் நூற்றாண்டு காலத்துக்கு இலக்கியத் தரமானது என்று கருதத்தக்க ஒரு நாவல்கூட வாசகர்கள் முன்வைக்கப்படவில்லை. பிறகுதான் ஆயிரத்துதொளாயிரத்து இருபதுக்கள் காலத்தில் விதவாவிவாகத்துக்காக ஆர்வத்தோடு கட்சி பேசிய, வ ரா.வின் 'சுந்தரி' நாவலும், அப்புறம், தேசவிடுதலை, பொருளாதார நல்வாழ்வு, கிராமத்துக்கு திரும்ப ஏக்கம் இவைகளில் அவா கொண்ட, கே. எஸ். வெங்கடரமணியின் 'முருகன் ஒரு உழவன்', 'கந்தன் ஒரு தேசபக்தன்' நாவல்களும், அதுக்குப்பின் சற்று ஏறக்குறைய அதே நோக்குடன் இருந்த, சங்கரராம் எழுதிய 'மண்ணாசை'யும் அவ்வப்போது வந்தவைகள். குறிப்பிட்ட கடைசி மூன்றும் இங்கிலீஷில் முதலில் எழுதப்பட்டு பிறகு தமிழாக்கப்பட்டவை என்பதையும் சொல்லிக் கொள்கிறேன். இவைகூட உடனே தொடர்ந்து பின்பற்றப்படவில்லை; மறுபடியும் இலக்கிய நாவலுக்கு வரட்சியான இடைவெளி நாட்கள். உடனடியாக

தொடர்ந்து சோதனை முயற்சிகள் செய்யப்படாமல் இருந்ததுக்கு என்ன காரணமாக இருந்திருக்கக்கூடும்? நாவல் நாட்டுக்குரியதாக இல்லையா, இல்லை, இந்த உருவத்தை நாட்டு மண்ணுக்கு இழுக்கத் தக்க அளவுக்கு வாழ்க்கை அவ்வளவு வசீகரமானதாகவோ அர்த்தம் உள்ளதாகவோ இல்லையா?

எது காரணமாக இருந்தாலும் சரி, முப்பதுக்கள் கால முடிவிலும் நாற்பதுக்கள் ஆரம்பத்திலும் வங்க, மராத்தி, இந்தி, இங்கிலீஷ் மொழி நாவல் மொழி பெயர்ப்புகள் வெளிவந்த பிறகுதான் தமிழ் வாசகன் கைகளுக்கு இலக்கியத்தரமான நாவல் கிடைக்க ஏற்பட்டது. முப்பதுக்கள் முடிவில் வந்த, ஆர். ஷண்முகசுந்தரம் நாவல் 'நாகம்மாள்' தரமான முதல் பிரதேச நாவல். தன் வாழ்வில் தன் கிராமத்தார்களோடு தனக்கு இருந்த உறவில் தனக்கு ஏற்பட்ட சிக்கல்களிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள தான் ஒருத்தியாகவே முடிவு செய்யவேண்டி இருந்த ஒரு பெண்ணைப் பற்றிய நல்ல, உளப்பாங்கான ஆராய்வு நாவல். நீண்ட இடைவெளிக்குப்பிறகு 1946ல், லோகாயத வாழ்வு முழுக்க வாழ்ந்து இறுதியில் ஆன்மீக உணர்விலே முடிந்த ஒரு வாழ்வை வர்ணிக்கும், க. நா. சுப்ரமண்யம் எழுதிய 'பொய்த்தேவு' அந்த நாவலை தொடர்ந்தது. 1952ல் வெளியான, ந. சிதம்பரசுப்ரமண்யன் எழுதிய 'இதயநாதம்' வெளியே இருந்து வாய்த்த அங்கிகாரத்துக்கும், பாராட்டுக்கும் தனக்கு உள்ளே இருந்து எழுந்த ஆத்ம திருப்திக்கும் சித்திக்கும் இடையே ஒரு கலைஞனுக்குள் எழுந்த போராட்டத்தையும் பின்னது வெற்றி பெற்றதையும் சித்தரிக்கிற நாவல் அது. ஐம்பதுக்கள் முடிவில் வெளிவந்த, தி. ஜானகிராமன் எழுதிய 'மோகமுள்' நாவல் பெண்ணுக்கும் இசைக்கும் இடையே, உடலுறவுக்கும் கலை ஆர்வத்துக்கும் இடையே கிழிபட்டுத் தவித்து முடிவில் இரண்டும் பூர்த்தியாகி ஆறுதல் பெறும் ஒரு சங்கடப்பட்ட ஜீவனின் கடும் சோதனை வாழ்க்கையை சித்தரிக்கிறது. இந்த மூன்று நாவல்களும் கமலாம்பாள் மரபில் வருபவை. தனிமனிதன், வெளிப்புற சமூக உலகத்தின் அழுத்தத்துக்கு எதிராக முரண்டி தாக்குப்பிடித்து நிற்க விரும்பினால் தனக்கு ஏற்படும் பிரச்னைகளுக்கு தானே முடிவுகண்டு தீர்மானத்துக்கு அவன் வரவேண்டிய அவசியத்தை சுட்டிக் காட்டுபவை ஆகும். இவைகளின் கலைச் சாதனைப்பற்றி சொல்வதானால், இதயநாதம் நல்ல நாவல், பொய்த்தேவு அதைவிட சிறந்தது, மோகமுள் மூன்றிலும் சிறந்தது. 'பொய்த்தேவு'ம் மோகமுள்ளும் சோதனை முயற்சிகள்—உத்தி பூர்வமாகவும் சரி, கதையம்சம் பற்றியும் சரி. மோகமுள் ஐரோப்பிய நாவல் மரபு வழியான முதல் நாவல். பின் ஐம்பதுக்களில் எழுதப்பட்ட, கிருத்திகாவின் நாவல் 'புகைநடுவில்' தமிழ் நாவலில் புதுதொனி பேசுகிறது. தங்கள் நகர வாழ்வு ஏற்படுத்தும் சிக்கலான உறவுகளின் விளைவாக எழும் ஈரொட்டான நிலைகளில் அகப்பட்டுச் சுழலும் 'சொபிஸ்டிகேடட்' என்கிற பசப்பானதும் போலிமெருகானதுமான குணம் வாய்ந்த ஆண் பெண்களின் ஒரு கோஷ்டி வாழ்வைப்பற்றியது. கடைசியாக நான் குறிப்பிட விரும்புவது சமீபத்தில் ஒரு பாதி மட்டும் வெளியாகி உள்ள லா. ச. ராமாமிர்தம் நாவல் 'புத்ர' அது 'ஸ்டிரீம் ஆப் கான்ஷஸ்னஸ்' என்கிற நனவோடை உத்தி நாவல். அதன் மறு பாதியை படித்த பிறகுதான் அதைப்பற்றி நான் சொல்ல முடியும். அது ஒரு நூதன முயற்சி என்று மட்டும் இப்போதைக்கு சொல்கிறேன்.

இங்கே நான் மேலே குறிப்பிட்ட நாவல்களுடன் தங்களுடைய மற்ற நாவல்களாலும் தமிழ் நாவலுக்கு பங்கு செலுத்தியதாக நான் கருதும் ஒரு சில தனிமனிதர்களை மட்டும் எடுத்துக் கொண்டிருக்கிறேன். ஐம்பதுக்களும் சரி இதுவரை ஆகியுள்ள அறுபதுக்களும் சரி ஒரு கள்ளத்தோற்றமான இலக்கிய (ஸூடோ-லிடரரி) தேனீக்கூட்டு சுறுசுறுப்புக் காலம். இப்போதைய காலம் வியாபார நோக்கு கொண்ட பத்திரிகைகளின் பக்கங்களை தவணைகளில் படிக்கிற, படிப்பு —வருகிற— பருவம் (லிடரஸி—கமிங்—ஏஜ்) வாய்ந்த ஒரு தலைமுறைக் காலம். ஆரம்ப நாவலாசிரியன் ஒருவன் லகுவாக மயக்கப்பட்டு வருகிறான். சீக்கிரமே பாமரரை திருப்திப்படுத்துவதில் பெருமை அடைந்து அதையே தொழிலாகக் கொண்டு விடுகிறான். கற்பனாசக்தி இல்லாதவர்கள் கைகளில் சரித்திர, சமூக நாவல்கள் பரிதபிக்கத்தக்க உற்பத்திகளாகி விடுகின்றன. பொதுப்படையாக இன்றைய போக்கு என்று சொல்வதானால் இதைத்தான் இன்றைய தோரணை என்று சொல்லலாம். தமிழ் நாவலின் போக்கு ஒவ்வொருவரும் தன்தன் வழியே வாழ்க்கையைப் பற்றிய தன் பார்வையை (விஷன்) வர்ணித்து உரைக்கும் அக்கறையுள்ள, மனப்பூர்வம் வாய்ந்த சுமார் ஒரு டஜன் படைப்பாளிகளின் ஒற்றொற்றையான, அரிதான சோதனை முயற்சிகளாகவே இருந்திருக்கிறது என்று சொல்லி இந்தப் பகுதியை முடிக்க விரும்புகிறேன். இன்னும் தமிழ் நாவல் குறி விலகியே போய்க்கொண்டிருக்கிறது. தமிழ் நாவல் அதன் சர்வதேச ஒத்த பகுதியோடு இடம் பெற இன்னும் வெகு தொலை போகவேண்டி இருக்கிறது

2

அடுத்து சிறுகதை நாவலைப் போலவே தமிழுக்கு புதிது. ஆனால் எல்லாவற்றையும்விட வளம் பெருகினது. இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் வ. வே. சு. அய்யரின் 'குளத்தங்கரை அரசமரம்' கதையுடன் பிறந்தது. உத்திரீதியாக தாகூரின் சிறுகதை வழியே அமைக்கப்பட்டிருந்தாலும் சுயமான தமிழ் வாழ்வுக்கு உரிய விஷயம் அடக்கி, சீதனம் பற்றிய தகராறால் ஏற்பட்ட ஒரு குடும்ப சோக நிகழ்ச்சியை கதையம்சமாக கொண்டிருக்கிறது. சிறப்பான உருவமும் நடையும் கொண்டு கலையம்சம் வாய்ந்த அந்த கதை நல்ல ஆரம்பம் செய்து வைத்தது. நாவல் பிறந்து சென்ற தொண்ணூறு ஆண்டுகளில் எந்த

அளவுக்கு அதில் வளர்ச்சி கண்டிருக்கவேண்டுமோ அந்த அளவுக்கு அது முன்னேற்றம் காட்டாதிருக்கையில், சிறுகதை பிறந்து ஒரு பத்து வருஷ காலத்திற்கு கொஞ்சம் மேற்பட்ட கால அளவிலேயே அது அதிகப்படியானவர்களால் ஆர்வத்துடன் கையாளப்பட்டிருக்கிறது. ஒருவேளை நாவலைவிட சிறுகதைக்கு இங்கே இசைவு இருந்ததோ அல்லது சூழ்நிலை தக்கதாக இருந்ததோ, அல்லது அதுக்கு உடனடியாக ஒரு பதில் கிடைக்கத்தக்க சரியான சமயத்தில் அது நுழைந்ததோ? எதானாலும் சரி. ஒரு சில தனிமனிதர்கள் கையில் அது உந்துதல் பெற்றது. அவர்கள் சீக்கிரமே அதை ஒரு இயக்கமாகவே ஆக்கிவிட்டார்கள். முப்பதுக்கள் காலம் முன்பாதி ஆண்டுகள் அரசியலில் சட்டமறுப்பு இயக்க காலம் என்றால் இலக்கியத்தில் மணிக்கொடி இயக்க காலம் என்றே சொல்லலாம். இந்த நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் மேற்கே புதுக் கவிகளின் படிமவியல் இயக்கத் (இமேஜிஸ்ட் மூவ்மெண்ட்) தோடு இந்த சிறுகதை இயக்கத்தை வரிசை சேர்க்கத் தோன்றுகிறது எனக்கு.

இதுக்கான பொறுப்பும் கீர்த்தியும் பி. எஸ் ராமையாவையே சேரும். அபூர்வமான கதை சொல்லும் திறமை, விரிந்த அநுபவ வீச்சு, உணர்ச்சி வெளியீட்டுச் செழுமை, உத்திரீதி சோதனைத் தாகம், சரளமான நடை, தாமஸ் ஹார்டியின் 'இளிவரல்' (ஐரனீ) தொனி ஆகிய அம்சங்களுடன் தான் சிறுகதைகள் எழுதினது மட்டுமில்லாமல், தன் கூட்டாளிகள் கையிலும் சிறுகதை வளம்பெருக வழி செய்தார். உலக சிறுகதை பரிச்சயம் கொண்டிருந்த அரை டஜன் தனிமனிதர்கள் சிறுகதை வளர ஊக்கிவிட்டார்கள் என்று சொல்லலாம். மனித ஜாதி அவனுடைய இறுதி மீட்சி இவைகளில் நம்பிக்கை, பரந்த அனுபவம், தத்துவ உள்ளாராய்வு, இறுக்கமான நடை, உருவம் பற்றிய விவேகம் இவைகளுடன் சிறுகதை எழுதிய ந. பிச்சமூர்த்தி ஒருவர். மற்றவர், சீரழிந்த, ஆத்மா கெட்டுப்போன இன்றைய மனிதன்மீது கோபம், மனிதஜாதிமீது வெறுப்பு மனப்பான்மை, அவனது சபல கேவல மனப்போக்கு பற்றிய நுட்பமான கவனிப்பு, ஆழ்ந்த அனுபவம், சோதனை ஆர்வம், தாக்கு நடை இவைகளுடன் எழுதிய புதுமைப்பித்தன். இன்னொருவர், காதல் சம்பந்தமாக அதன் ஆரோக்ய அம்சத்தை மட்டும் எடுத்துக்கொண்டு உளப்பாங்கு போக்காக துருவிப்பார்த்தல், மனமுறிவு, ஏக்கம் ஆகிய உணர்வு, உணர்ச்சித்தீவிரம் அமைப்பு பற்றி பூரண ஞானம்; சக்தி நடை ஆகியவை வாய்ந்த கு. ப. ராஜகோபாலன். அடுத்து, காதல் சம்பந்தமாக அதன் நோய்த் தன்மை அம்சத்தை எடுத்துக்கொண்டு அடிமன விசாரணைப் போக்காக துருவிப்பார்த்தல், மனச் சடைவு. தன்னைத் துன்புறுத்திக்கொள்ளுதலிலே ஒரு நோய் மன, திருப்தி காட்டும் மனநிலை, நுட்பமான நடை, குறியீட்டுப் போக்கான ஃப்ராங் காஃப்காவின் பாணி, நெஞ்சறிந்து உருவத்தை கையாளல் ஆகிய குணங்களுடன் எழுதிய மௌனி. பெ. கோ. சுந்தரராஜன் மன ஒதுக்கம், இல்லாத நடப்பியல் தன்மை, சிந்தனை, நடத்தை, பேச்சு இவைகளில் பாசாங்கற்ற இயல்பான குணம். மனதில் நாசூக்கான அசைவோட்டத்தை பதிவு செய்தல், அதுக்கேற்ற நளினமான நடை, ஆகிய தன்மைகளுடன் எழுதினார் மரபில் அசைக்கமுடியாத நம்பிக்கை, இயல்பு பிறழாத தன்மை, நுண்மையான உணர்வுள்ள மென்மையான பாத்திரங்களை சித்தரித்தல், எளிய நடை ஆகிய போக்கில் ந. சிதம்பரசுப்ரமண்யன் சிறுகதைகள் எழுதினார். இவர்களுக்குப் பிறகு லா. ச. ராமாமிருதம் கதைகள், வாழ்வு பற்றி மனமடிவான திடனழிந்த நோக்கு, வில்லிய ஃபாக்னரின் சாயை தங்கள் பார்வையை உட்புறம் திருப்பிக் கொண்ட வக்ர பாத்திரங்கள் உலகம், சுருட்டின நடை, ஆகியவை கொண்டவை. அப்புறம் க. நா. சுப்ரமண்யம், வாழ்வுபற்றிய அறிவுபூர்வமான நோக்கு 'எமோஷனல் ஸ்டாஸிஸ்' என்கிற உணர்ச்சித் தீவிரம் அடங்கிவிட்ட பிறகு ஏற்படுகிற மனவோட்டத்தின் தரத்திலே நம்பிக்கை, சோதனைப் பேராசை, ஆத்யாத்மிக (மெடபிஸிகல்) அடிநாதம், பேச்சு தோரணையான நடை இவைகளுடன் எழுதிய கதைகள். பிறகு தி. ஜானகிராமன் மென்மையான ஹாஸ்யம், கூர்மையான இளிவரல் (ஐரனி) பரிகாச் தொனி; கு. ப. ரா. போல் ஆண்—பெண் உறவு பற்றிய எழுத்து, பிரதேச மணம், க. நா. சு. போல பேச்சுப்போக்கான நடை ஆகிய அம்சங்கள் கொண்ட கதைகள் எழுதினார்.

இந்த தனிமனிதர்களை தொடர்பவர்கள் கிடைத்தது சிறுகதைக்கு அடித்த அதிர்ஷ்டமே. தி. ஜ. ரங்கநாதன், கி. ரா. சிதம்பர ரகுநாதன், கு அழகிரிசாமி, வல்லிக்கண்ணன்' எம். வி. வெங்கட்ராமன், சுந்தரராமசாமி ஜயகாந்தன் ஆகியோர் இந்த போக்கை காப்பாற்றிக்கொண்டு வந்திருக்கிறார்கள் என்பது எனக்கு நிச்சயம். ஆனால் அறுபதுக்கள் காலம் பொதுவாக ஐம்பதுக்கள் காலத்து படைப்புத் திறமைசாலிகள் வரட்சியை வழியாகப் பெற்றிருக்கிறது. இலக்கிய வாசகன் கவலைப்படும்படியாக நாவலைப் போலவே சிறுகதையும் குறிதள்ளிப்போயிருக்கிறது. இருந்தாலும் சிறுகதையில் நல்ல சேமிப்பு இருப்பதால், இன்னொரு நல்ல சரக்கு வருகைக்கு காத்திருந்து கொஞ்ச காலத்துக்கு இந்த நஷ்டத்தை தாங்கிக் கொள்ள முடியும்?

## 3

இந்தக் காலத்து கவிதைக்கு திரும்பினால் தற்கால கவிதைக்கு முன்னோடியும் ஒரு போக்குக்கு மூலவருமான சுப்ரமண்ய பாரதி (1882–1921) யுடன் தான் ஆரம்பிக்க வேண்டி இருக்கிறது, இந்த நூற்றாண்டின் முதல் இருபது ஆண்டுகள் வரை மட்டுமே நிலவிய அவருடைய கவித்துறை சாதனை மொழி இலக்கியம் சிந்தனைபற்றி முழுமையாக பழுதுபார்க்கப்பட்ட ஒரு காலகட்டத்தை அடையாளம் இடுகிறது. பழசிலிருந்து முறித்துக் கொண்டு ஏற்பட்ட முதன்மையாக குறிப்பிட

த்தக்க அம்சம், ஒப்பாசாரமாக கையாளப்பட்டு வந்த போக்கிலிருந்து எளிமையாயும் நேரேயும் சொல்லும் முறை கையாளப்பட்டது தான். சுருக்கமாக, தமிழனின் தற்கால விஷயம் தெரிந்த அறிவின் குறியீடு பாரதி. அவர் பேசும் விதம் எங்களுக்கு தனிப்பட்ட பொருத்தம் உள்ளது. எங்களைப்பற்றி கொஞ்சம் எங்களுக்கே புலப்படுத்துகிறது இந்த தனித் தலைவனை புகழ்வதை நிறுத்திக் கொண்டு இருபதுக்களில் அவர் வழியில் தொடர்ந்த பாரதிதாசன், ச. து. சுப்ரமண்ய யோகி இருவரையும் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். பாரதியர்களான இருவரும் கொஞ்சகாலம் கொடியை தூக்கிப் பிடித்து பறக்க விட்டுக் கொண்டிருந்தார்கள். கொஞ்சதூரம் எட்டுவைத்தபின் பாரதிதாசன் அதை வீசி எறிந்துவிட்டு அப்பட்டமான கொள்கைக்கு ஒப்படைத்துக் கொண்ட ஒரு எழுத்துப் போக்கில் ஈடுபட்டு கவித்வபார்வைகளையும் கலைத்தன்மையையும் இழந்து விட்டார், சுப்ரமண்ய யோகி சீக்கிரமே கம்பன்காரராக மாறி கம்பனது சொல்லாட்சி வயப்பட்டு, தற்கால விஷயம் தெரிந்த அறிவும் காட்டாமல் பின்னால் வரும் கவிகளிடம் எதிர்பார்க்கப் படுகிற மனத்திசைவு விரிவும் அவருக்கு இல்லாமல்போய்விட்டது. தற்காலக்கவிதை சம்பந்தமாக கொஞ்சம் நம்பிக்கை யார் மீது இருந்ததோ அந்த இருவரும் பாரதி காட்டிய ஒளிப்பாதையிலிருந்து பிறழ்ந்து விடவே பொதுவாக இமிடேஷனாக வெறும் செய்யுள் சகதியில் பாரதிக்கு முன் சில நூற்றாண்டுகள் கவிதை சிக்கிக் கிடந்தது போலவே மீண்டும் ஏற்பட்டுவிட்டது. தூரத்து பழங்கால கவிதைப் பாங்கை இமிடேட் பண்ணுவதானால் பிடிப்பு இல்லாமலும் விடப்பாயும் பழம்போக்காகவும் இருக்கும். சமீபத்திய கால கவிதைப் பாங்கை இமிடேட் செய்வதானால் வெறும் அலங்காரமாயும் சொல்மாரியாயும் அதிகமாக உபயோகித்து நச்சுப்பண்ணப்பட்டதாகவும் இருக்கும். பாரதியே, ஒரு தேசியவாதியாகவும் தேசீயப்பாடல்கள் இயற்றுபவராகவும் எப்போதும் தெரியப்பட்டு வந்திருந்த போதிலும் ஒரு கவியாக எடுத்துக் காட்டப்பட காத்திருக்க வேண்டி இருந்தது. அவர் காலமாகி பத்து வருஷ காலத்துக்கு மேற்பட்டு அவருக்கு 'மகாகவி பட்டம் சம்பாதிக்க கே. சீனிவாசனுடன் சேர்ந்து நடத்திய சின்னப் பத்திரிகை மணிக்கொடி மூலம் ஒரு இயக்கத்தையே நடத்தினர் வ. ரா.

ஆனால் உரை நடை வளர்ச்சிக்கு வ.ரா. என்ன தூண்டுகோல் கொடுத்தாரோ அதை கவிதைக்கு செய்ய முடியவில்லை தான் நடத்திய மணிக்கொடிமூலம். ராமையாவும் தன் மணிக்கொடி மூலம் செய்ய முடியவில்லை. மணிக்கொடி கோஷ்டி அவ்வளவு சிறுகதையிலேயே மூழ்கி இருந்தது இருந்த போதிலும் அந்த கோஷ்டியில் 'இரட்டையர்' என்று அழைக்கப்பட்ட ந. பிச்சமூர்த்தி கு. ப, ராஜகோபாலன் 'இருவரும் தங்கள் பேனாக்களை கவிதையில் பரிசோதனையாக முக்கினார்கள் 'வெர்ஸ லிப்ரே' என்ற இலகு கவிதை வழியில் எழுதப்பட்ட பாரதியின் 'காட்சி, வால்ட் விட்மன் எழுதியபுல்லின் இதழ்கள்கவிதைகள் அவர்களுக்கு தெரியும் இதே வழியில் தங்கள் கவிதைகளை உருவாக்கினார்கள் சீக்கிரமே அதே கோஷ்டியை சேர்ந்த புதுமைப்பித்தன் சேர்ந்து கொண்டார். கொஞ்சம் தள்ளி வல்லிக்கண்ணனும் இந்த சிறு கோஷ்டியில் சேர்ந்தார். இது வரை கையாளப்பட்டு வந்த சந்தச் செய்யுள் வகைகள் பொன்னாக இருந்தாலும் விலங்கு விலங்குதான் என்று கருதினார்கள். சம்பிரதாயமான உருவவகைகளை உதறிவிட்டுகருத்தின்ஒத்திசைவுக்கும் கருத்து முழுமை காட்டும் வரியமைப்புக்கும் முக்யத்வம் கொடுத்து எதுகைமோனையை லட்சியம் செய்யாமல் தற்கால வழக்குச் சொற்களை உபயோகித்து புதுப்படிமங்களை உருவாக்கிஉடனிகழ்கால விடைப்பு நிலைகளை (டென்ஷன்) எடுத்துக் காட்டி. தற்கால தொல்லை சிக்குகளை உணர்த்தி இவர்கள் நாற்பதுக்கள் மத்திவரை கவிதை படைத்து வந்தார்கள். கவிதைகள் அங்கொன்றும் இங்கொன்றுமாகவும் தான் இருந்தன. அதுவும் அப்போது இருந்த 'கிராம ஊழியன்' 'கலாமோஹனி' ஆகிய இரண்டு சின்ன பத்திரிகைகள் மூலம் வெளிவந்தன கு. ப ரா. புதுமைப்பித்தன் காலமானதும், பிச்சமூர்த்தி வேறு வேலைக்குப் போய் பதினெட்டு ஆண்டுக்காலம் எழுதாமல் இருந்ததும், பத்திரிகைகள் இரண்டும் மூடப்பட்டதும் சேர தற்கால கவிதைக்கு ஒரு தடை ஏற்பட்டது, ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்தி நாலு முதல் ஐம்பத்தொன்பது வரை மீண்டும் செய்யுள் இயற்றுபவர்களுக்கு காலம் வியர்பார நோக்கு கொண்ட மாத வாரப்பத்திரிகைகள் தினசரிகளின் தீபாவளி பொங்கல் மலர்கள், நடை முதல் விஷயங்கள் பற்றிய ரேடியோ கவியரங்கங்கள் ஆகியவை இலக்கியத் தரக் குறைவான செய்யுள்களால் நிரம்பி இருந்தன.

1959ல் ஆரம்பிக்கப்பட்ட சின்னப்பத்திரிகை 'எழுத்து' பிச்சமூர்த்தியின் பழய கவிதை ஒன்றை போட்டதுடன் புதுக் கவிதை திரும்ப அச்சுப் பக்கங்களில் இடம் பெற்றது. முதன்மையாக இலக்கிய விமர்சனத்தையே தன் உத்தேசமாகக் கொண்ட எழுத்து புதுக் கவிதைக்கான குரலாகவும் ஆகிவிட்டது. ஒரு ஆண்டில் திறமை அறிகுறி காட்டு ஒரு ஆறுபேர் கைகளில் சுமார் ஐம்பது கவிதைகளும் ஏழு ஆண்டுகளில் சுமார் முப்பது பேர்கள் கையில் முன்னூற்றைம்பது கவிதைகளும் அது வெளியிட்டிருக்கிறது. வெகுநாள் மவுனத்துக்குப் பிறகு பிச்சமூர்த்தி திரும்ப எழுத முனைந்தார். பாதை காட்டினார். இது ஆர்வத்தோடு பின்பற்றப்பட்டது. பிச்சமூர்த்தியின் ஐம்பது கவிதைகளில் 'காட்டுவாத்து' 'வழித்துணை' இரண்டும் குறிப்பிடத் தக்கவை. சுமார் ஐநூறு வரிகள் கொண்ட வழித்துணை சந்தேகமின்றி ஒரு பெரிய சாதனை. மேல் நாட்டுக்கு டி. எஸ். இலியட்டின் பாழ் நிலம்' ஒரு சிறந்த தற்கால கவிதை ஆனால் 'வழித்துணை' நமக்கு சிறந்த தற்கால கவிதைதான். தற்காலத் தன்மை (மாடர்னிட்டி) என்பதுக்கு மேற்கே மன முறிவு, இந்த உலகத்தின் நாசமான நிலை உணர்வு அடிப்படைத் தொனியாக இருப்பது என்று

பொருள் இருக்கலாம். ஆனால் நமக்கோ மனித ஜாதிக்கு ஒரு நல்ல காலம், எதிர்காலத்தில் நம்பிக்கை என்ற உணர்வு அடிநாதமாக உள்ள தொனி என்ற பொருள்தான். இது சம்பந்தமாக பிச்சமூர்த்தி கூறியிருப்பது ரொம்ப அர்த்தம் வாய்ந்தது. 'இரண்டு உலக யுத்தங்களும் மேற்கே இந்த உணர்வை ஏற்படுத்தி இருக்கலாம். ஒரு வேளை மேற்கு சிதறுகிற நிலையில் இருக்கக் கூடும். ஆனால் நாம் உருவாகும் ஒரு சமுதாயம், நாடு. மனமுறிவு நமது பொது மனப்போக்காக வாழ்க்கையில் ஒருபோதும் இருக்கமுடியாது. இலக்கியத்தில் இருக்கவே முடியாது.'

பிச்சமூர்த்தியின் 'வழித்துணை', படைப்புத் தேவன் பிர்மா அழகுணர்ச்சி இல்லாமல் முறையாக யந்திரம்போல் காலத்தோடு போட்டி போட்டு தொகையளவு மட்டும் கருதி படைத்துக்கொண்டே போகிறவன்; காலத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் பலியாகிவிடுவதையும், படைக்கப்பட்ட மனிதன், கைத்திறன் கொண்ட கலைத் தொழிலாளி தனக்கு உறுதுணையாக ஒரு லட்சிய கைத்தடியை உருவாக்குவதில் முனைந்து காலத்தைப் பற்றிய நினைப்பே இல்லாமல் அழகாக்குவதிலேயே கருத்தூன்றி உழைத்து சாதித்து காலத்தை வென்று நிரந்தர இளமையோடு இருப்பதையும் வெளியிடும் கதையைக் கொண்டது. கதையைவிட இந்த கவிதை மனிதனின் அளவு கடந்த சக்தி, உபயோகமில்லை என்ற அழகுரலுக்கு எதிராக அனுகுணமான (பாஸிடிவ்) மதிப்புகளில் வேட்கை, பாமரத் தன்மைமீது அழகுத் தன்மை கொண்ட வெற்றி இவைகளின் குறியீடாக இருக்கிறது வழித்துணை. கவிதையின் அமைப்பு மிகச் சிறந்த தரமானது

பிச்சமூர்த்தி மனிதனில் வைத்த திடமான நம்பிக்கைக்கு மாறாக, சி. மணி மனிதனின் திக்கற்ற நிலையை உணர்பவராகத் தோன்றுகிறது. அவருடைய 'நரகம்' 'வரும் போகும்' ஆகிய முன்னூற்றைம்பது வரிக் கவிதைகள் இரண்டும் குறிப்பிடத்தக்கவை. உலகில் மனிதன் நாசமாகிய நிலைமை மேலோங்கி எழும் உபயோகமின்மையை உணரும் மனநிலை ஆகிய கருத்துக்கள் இவைகளில் எடுப்பாக தொனிப்பவை. இந்த இரண்டும் நிச்சயமாக மேற்கத்திய கவிதைகளான 'ஜெரான்ஷியான்', ஃப்புருஃப்பராக், பாழ்நிலம் போல திருத்தமான தற்காலத்தன்மை தொனிக்கும் கவிதைகள். நரகம், பாலுணர்வு எழும்பிய ஒரு விவாகமாகாத வாலிபனது, தன்னைச் சுற்றி எங்கும், நிகழும் காட்சிகள், படிக்கும் காவிய வரிகள், பார்க்கும் விக்கிரக வடிவங்கள், கேட்கும் சினிமா பாட்டுக்கள் மூலம் வெளிக்காட்டிக்கொண்டிருக்கும் எங்கும் பரவி உள்ள பாலுணர்வு எழுப்புச் சூழ்நிலையால் திக்பிரமை யடித்துப்போய் அதே மனப் ராந்தியாய் அதுக்கு எதிராக தன்னை தூக்கிப் பிடித்து நிறுத்திக்கொள்ள தன் தாங்கும் தன்மையில் நம்பிக்கை இல்லாமல், உடனடியாக ஏற்படக் கூடிய தன் நாசத்தைப் பற்றிய பீதிகொள்ளும் ஒருவனது மனோவிகார யாத்திரையை தன் பொருளாகக் கொண்டது. பொருளுக்கு ஃப்ராய்டின் தத்துவ நோக்கிலும் வடிவத்துக்கும் உத்திக்கும் எலியட்டின் பாணியிலும் அவரது மற்ற கவிதையான 'வரும் போகும்' கவிதையோடு தமிழுக்கு ஒரு தனிப்பட்ட பங்கு அளிப்பு.

புதுக் கவிதை இயக்கத்தில் இவர்களை பின் தொடர்பவர்களில் தங்கள் தங்கள் தனிப் பார்வைகளால் பங்கு அளிக்கும் தர்மு சிவராமு, தி. சோ. வேணுகோபாலன், எஸ். வைதீஸ்வரன், டி. கே. துரைஸ்வாமி, சுந்தர ராமசாமி ஆகியோரை குறிப்பிட விரும்புகிறேன். இந்த சாதனைக்கு எதிராக அறுபதுக்களில் சம்பிரதாய வழிக் கவிதை குறிப்பிடும்படியாக எதுவும் சாதிக்கவில்லை.

## 4

கடைசியாக, தமிழுக்கு எல்லாவற்றிலும் புதிய துறையான விமர்சனத்துக்கு வருவோம். இந்த நூற்றாண்டின் முதல் கால் பகுதியில் வ. வே. சு. அய்யர் கையில் ஆரம்பமாயிற்று. அவர், அன்னிய இலக்கிய பரிச்சயம் அதனால் விளைந்த விமர்சன அறிவுடன் மாறிவரும் காலம், மனப்போக்கு இவைகளுக்கு ஏற்ப ஒரு தற்கால விஷய அறிவு கொண்டு நமது விமர்சக மனோபாவத்தில் ஒரு மறு நிலைமை நிச்சயித்துக் கொள்ளுதல்வேண்டும் என்று அவர் வாதித்தார். அவர் பார்வை அழகியல் பாங்கானது. முப்பதுக்களிலும் நாற்பதுக்களிலும் டி. கே. சிதம்பரநாத முதலியார் அவருக்குப்பின் அவர் வழியில் சென்றார். இந்த இருவரைத் தவிர மூன்றாம்வரை சுட்டிக்காட்ட முடியவில்லை என்றால். சிலாகித்து எழுதுவது நிறைய இருக்கத்தான் செய்தது. ஆனால் குணம் குறை சொல்லும் விமர்சன முறையில் இல்லை. ஒன்று மட்டும் சொல்லி ஆகவேண்டும். வசனத் துறை பற்றி யாருக்கும் கவலை இருப்பதாகத் தெரியவில்லை. சிறுகதையும் நாவலும் ஒருவரை மதிப்பீடு செய்யத் தூண்டும் அளவுக்கு போதிய அளவு உற்பத்தி இல்லாதது இதுக்கு காரணமாக இருக்கக்கூடும்.

ஐம்பதுக்களில்தான் அவ்வப்போது அதுவரை அங்கொரு வார்த்தையும் இங்கொரு வார்த்தையுமாக சொல்லி வந்துகொண்டிருந்த க. நா சுப்ரமணயம் விமர்சனத்தில் ஆழ்ந்த சிரத்தை காட்ட ஆரம்பித்தார். அவருடைய முக்ய தாக்கு இலக்கு பண்டிதர்கள். படைப்புக்கும், ரசனைக்கும் வழி அடைத்து நிற்பவர்கள் அவர்கள்தான் என்பது அவர் கருத்து. தூய தமிழ் என்று இருப்பதாகச் சொல்லப்படும் ஒரு நோக்குடன் அதை திணிக்க முற்படும் ஒரு முயற்சி, தமிழ் இலக்கியம் மட்டுமின்றி, தமிழ் மொழியையே மென்னியைத் திருகுகிறதாகும் என்பது அவரது உறுதியான நம்பிக்கை. அவருடைய இன்னொரு அடி இலக்கிய எழுத்துக்கு கேடு வரும்படியாக, பாமர ருசிக்கு ஏற்ப கொடுக்கும் மட்டமான சரக்குக்கு ஊக்கம் கொடுக்கும் வியாபார நோக்குப் பத்திரிகைகளின் மீது விழுந்தது. தான் படித்து

ரசித்த புத்தகங்களையும் போற்றுகிற நூலாசிரியர்களையும் அவர் வாசகர்களுக்கு தெரிவித்தார். போலியான எழுத்திடமும் எழுத்தாளர்களிடமும் கடுமையாக இருந்தார். ஒரு பத்து ஆண்டுக் கால இந்த இடித்துரைக்குப் பிறகு விமர்சன உணர்வு ஒளி உதயமாகும் அறிகுறிகள் இருப்பதை பார்க்க முடிவதுக்கான பெருமை அவரைச் சாரும். ஆனால் அவருக்கு பாதகமாக இருப்பது ஒன்று. அவர் பொதுப்படையாகவும் தன் மூப்பாகவும் கருத்துக்களை சொல்லி எதனால் தான் அப்படிச் சொல்கிறார் என்று ஆதாரம் காட்டாமல் நின்று விடுகிறார். ஐம்பதுக்களிலும் சரி இப்போதும் சரி சுட்டிக்காட்டினால் போதும் மற்றதை வாசகன் பார்த்துக் கொள்ளட்டும் என்கிறார். தான் சொன்னது தன், படிப்பு, தன் முடிவு இரண்டிலும் நம்பிக்கை வைத்து அப்படியே வாசகர்களால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். தான் ரசித்த புத்தகங்களைப் பற்றிக்கூட விவரமாக ஆராய்வதிலிருந்து முகத்தை திருப்பிக்கொள்கிறார். அவருடைய அபிப்ராயங்களை கவனிக்கப்பட்டன தான். ஆனாலும் அந்த முடிவுக்கு அவர் எப்படி வந்தார் என்ற ஆதார ஆதரவு இல்லாததால் கொஞ்சம் விதரணையான வாசகனும் கூட, வியாபாரப் போக்கான பத்திரிகை உலக சூழ்நிலையில் இலக்கியத் தரம் இல்லாத எழுத்து கடல்போல தன்னை நாலுபக்கமும் சூழ்ந்துள்ள நிலையில், அதைப்பற்றி சிலாகிக்க அதில் என்ன அவ்வளவு இருக்கிறது, எப்படி தான் அதை ரசித்து அனுபவிப்பது என்று உணர இயலாமல் திகைத்து நிற்கிறான்.

இந்த கட்டத்தில் இலக்கிய விமர்சனம் அடுத்த கட்டத்துக்கு நகரவேண்டி இருந்தது வாசகன் தான் படித்ததை ரசித்து அனுபவிக்க அவனை பழக்குவது தான் விமர்சகன் வேலை. இதை நோக்கமாக கொண்டு 1959ல் 'எழுத்து' ஆராய்வு முறை விமர்சகப் போக்கில் சார்பு கொண்டு ஆரம்பிக்கப்பட்டது பொருளைவிட அதிகம் அமைப்பில் கவனம் செலுத்துவதுதான் அதன் ஆசிரியப் பார்வை. இலக்கிய அளவு கோல்களைத் தான் முதலில் வைத்துப் பார்க்கவேண்டும். மற்றவைகளை பிறகு கொண்டு பார்க்கவேண்டும் என்ற டி. எஸ் இலியட்டின் கருத்தை அது தன் மூலவாக்கியமாக கொண்டிருக்கிறது. தமிழில் இதுதான் இப்போதைக்கு உடனடியான தேவை என்று எழுத்து கருதுகிறது. மன விரிவான பார்வை கொண்டு ருசி ஏற்படுத்துவதில் அக்கறை காட்டி ஒரு படைப்பின் பல்வேறு கலையம்சங்களையும், மதிப்புகளையும் வெளிக்கொணர்ந்து காட்டக்கூடிய எந்தவிதமான பார்வைக்கும் இடம் கொடுக்கிறது. தனிக் கவிதைகள், நாவல்கள், சிறு கதைகள், பற்றிய ஆய்வும், அதன் பக்கங்களில் காணப்படுகின்றன. தொகுப்புகள் மதிப்பிடப்படுகின்றன. ஆசிரியர்கள் மதிப்பிடப்படுகிறார்கள். தர்மு சிவராமு, வெ. சாமிநாதன், சி. கனக சபாபதி, வல்லிக்கண்ணன், எம். பழனிசாமி டி. கே. துரைஸ்வாமி, நான் ஆகியோர் செய்து வருகிறோம். இப்போது ஆரம்பநிலையில் தான் இருக்கிறது. ஆனால் வேகம் கலந்த ஈடுபாடு கொண்ட கோஷ்டியால் விடாமுயற்சியுடனும் சிரத்தையுடனும் கையாளப்பட்டால் எதிர்கால வளரும் வாய்ப்பு அதுக்கு இருக்கிறது.

நான் சொல்லி இருப்பவைகளிலிருந்து, நான் நினைக்கிறேன், சிறு கதையும் நாவலும் தொகையில் பெருகிக் கிடந்தாலும் இப்போது தரத்தில் வறண்டு இருக்கிறது. தற்கால கவிதையும் விமர்சனமும் பருவம் வந்துகொண்டிருக்கிறது என்பதை நீங்கள் அறிய முடிந்திருக்கும் நான் சுட்டிக் காட்டி இருக்கும் சாதனை காட்டிய தனி மனிதர்களுடன் இன்னும் சில தனி மனிதர்கள் சக்தியுடன் இந்த நாலு துறைகளிலும் சேர்ந்துகொள்ளக் கூடுமானால் அறுபதுக்களின் பின் பாதியில் தமிழ் இலக்கியம் தான் பெருமைப்படுகிற வளமான பிதுரார்ஜித பீடத்தில் மீண்டும் உட்கார்ந்து கொள்ள முடியும்.

---

## நிலாக் கனவு

நிலவு கசக்கும் இரவில்
நீளத் தனியே
மணல் புரட்டி
அலைவிளிம்பில் அசையாமல்
காலமற்று நின்றும்...
ஆவி கரை காணாது

—பட்டாய்,
பார்வை
வாழ்வுள் அளைந்து
கலங்கி,
கண்ணளக்கா......
பாயாய் —
மூலையற்று, விரியும்
விஞ்ஞானக் குழப்பங்களில்,
ஞானச் சதுப்புகளில்
மருண்டு,
உலக நிழலில்
தணல் நினைவாய்,
புழுங்கி
நித்தம்,
நானே...ஏன்...நானென்று
கேட்டிக் குமையும்...

நானே
பழக்கு மோர்
நிலாக்கனவும்
இன்றை
எண்ணக் கசப்பும்,
ஒரு வேரா ?
வெவ் வேறா ?

—எஸ், வைதீஸ்வரன்

# மரப்பாவைகள்

## காரூர் நீலகண்ட பிள்ளை

வீட்டின் கதவு நம்பரை சரிபார்த்துக் கொண்டே கணக்கு எடுப்பவன் தனக்குள் சொல்லிக் கொண்டான்; '312 ஆசாரி பரம்பில்'. ஒரு கூரைக் குடிசை சுவர்கள்கூட தென்னங் கீற்றுகளால் ஆனது. முகப்புக் கதவுக்கு அவன் வந்தான்.

'யாரும் இல்லையா?' அவன் பலக்க கேட்டான்.

'ஒரு பெண் குடிசைக்குள் இருந்து வெளியே வந்தாள்.

'உன் பெயர் உம்மிணியா?' என்று கேட்டான் கணக்கெடுப்பவன் தன் கையில் இருந்த காகிதங்களை பார்த்துக்கொண்டே.

அந்த இளம் பெண்ணின் அகலவிரிந்த பெரிய கண்கள் இன்னும் விரிந்தன அவள் பீதி அடைந்தாள். கேசு, போலீசு ஏதாவது இருக்குமோ?

'நான் ஆட்களை கணக்கெடுக்கிறேன். சென்ஸஸ். இங்கே யாரெல்லாம் இருக்கிறார்கள்?'

'இப்போதைக்கு நான் மட்டும். அம்மா துறையின் மறுபக்கத்துக்கு நாணல் வெட்டி வரப் போயிருக்கிறாள். தம்பி வேலைக்குப் போயிருக்கிறான்.

'உம்மிணி என்கிறது யாரு?'

'என் அம்மா.'

'சரி, உம்மிணி', என்று எழுதிக்கொண்டே கேட்டான் 'ஆணு பெண்ணு?'

இதைக் கேட்டு அவள் லேசாக சிரித்தாள். எளப்பமாக. இருந்தாலும் என்ன வசீகரமான புன்னகை!

'அம்மாவும் நானும் பெண்கள், என் தம்பி ஆண்.'

'அப்பா இல்லையா?'

'இல்லை. இறந்துவிட்டார்.'

'அப்போது, உம்மிணி விதவை இல்லையா?',

'இப்போ இருக்கிறதைத்தானே கேட்கிறீர்கள்? ஆமாம்.'

அவள் சேர்த்தாள்: 'சென்ஸஸ் எடுக்கிறபோது குடையை விரிக்க அனுமதி கிடையாது என்கிற மாதிரி படுகிறது. இந்த எரிக்கிற வெய்யிலில் நீங்கள் மனிதர்களை கணக்கெடுத்துக் கொண்டே போனால் சீக்கிரமே கணக்கெடுப்பிலே ஒரு ஆளை குறைத்துக்கொள்ளவேண்டி இருக்கும். இந்த பெஞ்சிமேலே நீங்கள் உட்கார்ந்துக்கலாம்.'

கணக்கெடுப்பவன் தாழ்வாரத்தில் ஏறி பெஞ்சிமேலே உட்கார்ந்து கொண்டான். தாழ்வாரம் ஒடுக்கமாக இருந்தாலும் சாணியாலே வழவழப்பாக மெழுகி கண்ணாடி போலே பளிச்சிட்டுக் கொண்டிருந்தது.

உம்மிணியை பற்றிய எல்லா தகவல்களையும் கேட்டு குறித்துக்கொண்டான் அவன்.

'உன் பெயர்?'

'நளினி', கொஞ்சம் வெட்கத்தோடு சொன்னாள்.

'வயது?'

'என்னைப் பார்த்து யூகிக்க முடியுமோ உங்களாலே?'

'நான் எதுவும் யூகிக்கவில்லை'.

அவள் லேசாக சிரித்தாள்..

'இருபத்தி மூன்று.'

'கல்யாணம் ஆகிவிட்டதா?

'ஆமாம்'

'அப்போது, கணவனும் இருக்கிறார், இல்லையா?'

அவள் தயங்கினாள்.

'இப்போது, இங்கே இல்லை' பதிமூன்றுவது மைலில் உள்ளவர்களை நீங்கள் கணக்கெடுத்தாச்சா?'

'அதை வேறே யாராவது செய்வார்கள். ஆக, கணவன் இருக்கிறார். இல்லையா?'

'ஆமாம்,' இல்லை ஏதாவது எழுதிக்கொள்ளுங்கள், உங்கள் இஷ்டப்படி', என்றாள் அவள் அதைப் பற்றி கவலையே படாதவள் போல

'ஆனால் ஆமாமுக்கும், இல்லைக்கும் ஒரே அர்த்தம் இல்லை, உனக்குத் தெரியுமோ?'

'அப்போது, ஆமாம் என்று எழுதிக்கொள்ளுங்கள். ஆனால் தெளிவாக இல்லாமல் இருக்கட்டும்.'

'ஒரு வேளை கல்யாணம் இப்போதுதான் நிச்சயமாகி இருக்கிறதோ? அப்படியானால் மணம் ஆகிவிட்டது' என்று எழுதமாட்டேன். 'மணமாகவில்லை என்று.'

'அப்படி இல்லை. எனக்கு மணம் ஆகிவிட்டது.'

அவள் தன் பின் தலையை சொரிந்துகொண்டாள். அப்போது அவளுடைய செழிப்பான கூந்தல் அவிழ்ந்து விழுந்தது, அவளுடைய வசீகரமான உருவத்துக்கு ஒரு நேர்த்தியான பின் திரையாக அமைந்தது.

'ஆமாம், கணவன்.

'ஆமாம், இல்லை.'

'விட்டுட்டதாக, இருக்கலாமா?' 'அப்படியானால் கணவன் இல்லை.'

'அந்த வார்த்தை வேடிக்கையாக இருக்கு, நீங்க அதை எழுதிக்கலாம்னு தான் நான் நினைக்கிறேன். என்ன சொன்னீர்கள்? இன்னொரு தரம் கேட்கிறேன். கணவன் இல்லாதவள். ஆமாம், ஏன் நிலைமை கொஞ்சம் குழம்பித்தான் இருக்கு. ஆனால் அவர் என்னை விலக்கவில்லை. அதுதான் அவர் செய்ததாக இருந்தால், வாராவாரம் அவர் ஏன் மத்தியஸ்தர்களை அனுப்புகிறார்?

'நீ அவரை விட்டுட்டதாக இருக்கலாம்?'

'சொல்லப்போனால் நான் அவர் பின்னாலே ஒருபோதும் போனதே இல்லே. பின்னாடி நான் அவரைவிட்டு விலகினேன் என்கிறதும் இல்லே. எது முறையானதோ அதை நீங்கள் எழுதிக் கொள்ளுங்கள். நீங்கள் எல்லாம் தெரிந்தவர் இல்லேயா?'

'உன் கணவனைப் பற்றி எனக்கு எதுவுமே தெரியாதே. நீ சொல்கிறதை நான் அப்படியே எழுதிக்கிறேன். உனக்கு கணவன் இருக்கிற தாக.'

'அதுதான் தேவலை'.

'எது தேவலே, எது மோசம் என்கிறதை குறித்துக்கொள்ள இல்லே இந்த புஸ்தகம். இருக் கிறதை அப்படியே எழுதிக்கிறது.'

'நான் இருக்கிறதைத்தானே சொன்னேன்,' என்று சொல்லிக்கொண்டே அவள் கூந்தலே முடிந்துகொண்டாள். அவசியம் இல்லாமல் அவன் அவளை கவனித்துக்கொண்டிருந்தான்.

'குழந்தைகள் ஏதாவது?'

'இல்லே, ஆணும் இல்லே, பெண்ணும் இல்லே!'

'அபார்ஷன் ஏதாவது உண்டா?'

'ஓ ஆமாம் எத்தனையோ! எங்களுக்கு மண மாகி ஆறு மாதம் கூட முடியவில்லே ஆரம்பமாகி விட்டது. அதிலே இருந்து எங்களுக்குள்ளே ஒரு தகராறே சண்டையோ இல்லாமல் ஒருநாள் கூட போனதில்லே.'

'என்ன சொல்கிறாய் நீ? தினமும் அபார்ஷனா?'

'ஆமாம், அதனாலேதான் நான் இங்கே திரும்பி வந்துவிட்டேன்.'

'இது ரொம்ப மோசம். நான் கர்ப்பச் சிதைவு என்று சொன்னேன். அதாவது குறைப் பிரசவம் என்று அர்த்தம்இது ஏதாவது இருந்ததா?'

'நீங்கள் என்ன அசிங்கமான கேள்வி எல்லாம் கேட்கிறீர்கள்? நல்லவேளே என் கூடப் பிறந்த வன் இப்போதைக்கு இங்கே இல்லாமல் போனது.'

இதைக் கேட்டு அவனுக்கு கொஞ்சம் எரிச் சல் வந்தது

'உன் கூடப் பிறந்தவன் இருந்தால் மட்டும் என்ன? உன் சிற்றப்பாவுக்கு பாட்டனார் இருந் திருந்தால் கூட நான் இந்த கேள்வி எல்லாம் கேட்டே இருப்பேன். நீ எல்லாத்துக்கும் சரியாக பதில் சொல்லித்தான் ஆகவேண்டும். நீ சொல்லாவிட்டால் அது குற்றம் ஆகும். நீ சொல் கிற எதுவும் ரகசியமாகத்தான் வைத்துக்கொள் ளப்படும்.

'உங்களுக்கு ரொம்ப வெப்பமாக இருந்தால் நீங்கள் இதாலே 'விசிறிக்கலாம்' என்று தனினி பெஞ்சியின் ஒரு ஓரத்தில் ஒரு பனே விசிறியை வைத்தாள். 'இந்த கேள்விகளே என் சகோதரன் முன்னால் கேட்டிருந்தால் வெட்கப்பட்டிருப் பேன் என்ற அர்த்தத்திலாக்கும் சொன்னேன்.'

'சரி?'

'இல்லே.'

என்ன இல்லே? பதில் சொல்லமாட்டாய், அப்படித்தானே?

'இல்லே, இல்லே, இல்லே. கர்ப்பச் சிதைவு பற்றி நீங்கள் கேட்டீர்கள் இல்லேயா? அதுக்கு பதில்தான் இல்லே.'

'உன் மாச வரும்படி எவ்வளவு?'

'என் சகோதரனுக்கு ஒருநாள் வேலேக்கு மூணு ரூபாய் கிடைக்கிறது.'

'உன் சகோதரனேப் பற்றி நான் கேட்கவர வில்லே. உன் வரும்படி—'

'நான் எந்த வேலேக்கும் போகிறதில்லே.'

'ஆக உனக்கு வருமானம் இல்லே. ஒருவர் ஆதரவில் இருப்பவரை......

'நானா? யார் சொன்னது உனக்கு இதை? அந்த கதா இருக்காளே, தோணித்துறை பக்கத் தில் இருப்பவள், இதை எல்லாம் உன்னிடம் சொல்லி இருக்கணும். அவளேப்பற்றியும் எனக்கு கொஞ்சம் சொல்லத் தெரியும்.'

அவன் இந்த தமாஷை அனுபவித்தான்.

'கதாவா? அவள் சொன்னளா. என்ன சொல் கிறே நீ? நான் சொன்னதை நீ சரியாக புரிந் துக்கவில்லே. ஒருவருக்கு வரும்படி இல்லேயானல் அவனே அவளோ சாப்பாட்டுக்கு இன்னெருவர் ஆதரவிலேதான் இருக்கவேண்டி இருக்கும். உனக்கோ வரும்படி இல்லே. இருந்தாலும் சாப் பாட்டுக்கும் உடைக்கும் மற்ற செலவுகளுக்குப் உனக்கு பணம் தேவை. இதெல்லாம் யார் உனக்கு தருகிறார்களோ, உன் அம்மாவானாலும் சரி, சகோதரன் ஆனாலும் சரி அவர்கள் ஆதரவில் தான் நீ இருக்கிறாய். நான் சொல்கிறது சரி தானே?

'கோர்ட்டில் அவர்கள் கேட்கிற கேள்வி மாதிரி இருக்கிறது?'

'கோர்ட்டிலே உன்னே கேள்வி கேட்கிறார்களா?'

'ஆமாம், அந்த சைத்தான் என்னே கோர்ட் டுக்கும் இழுத்தது!'

'உன் புருஷனேத்தானே குறிப்பிடுகிறாய்?'

'அவன் என் புருஷன்? எனக்கு புருஷனே இல்லே என்று தயவு செய்து எழுதிக்கொள்ளுங் கள். அதுக்காக உங்களுக்கு ஏதாவது கொஞ்சம் கொடுக்கத் தயாராக இருக்கேன்.'

'அது இருக்கட்டும். உனக்கு வரும்படியே இல்லே, இல்லேயா?'

'கொஞ்சம் வரும்படி வருது. நான் யாரை யும் நம்பி இல்லே. குறைந்தது மாதம் பதினேந்து ரூபாய் சம்பாதிக்கிறேன்.'

'சரி, உன் தொழில் என்ன?'

இந்த சிர்கார் என்னெல்லாம் தெரிந்துக்க விரும்புகிறார்? எனக்கு ஒரு வேலே மட்டும் இல்லே, பலவேலே.'

'எல்லாத்தையும் நீ சொல்லலாம். இந்த கடுதாசியிலே போதுமான இடம் இருக்கு.'

'இந்த வீட்டிலே சமைக்கிறது நான்தான். தாழ்வாரத்தை மெழுகுவதும் நானேதான்.'

'என்ன பிரமாதமாகமெழுகி இருக்கு. கண் ணாடி மாதிரி பளிச்சென இருக்கே.'

என் பணிக்கன் — அவன் எனக்கு ஒன்றுமே இல்லே இப்போது – ஒரு காலத்தில் என் கன்னங் கள் கண்ணாடி மாதிரி இருக்கு என்று சொல்வ துண்டு. அது மாதிரி இந்த தாழ்வாரம் என் கன்னம் மாதிரி இருக்கும்.' தமாஷுக்கு அவள் சிரித்தாள்.

அவனும் சிரித்தான்.

இதன் நடுவே பக்கத்து வீட்டு சிறுமி ஒருத்தி முற்றத்தில் வந்து நின்று கணக்கெடுப்பவரையே உறுத்துப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

'இந்த பெண்ணுக்கு வயது பத்துதான் ஆகிறது. அவள் உறுத்துப் பார்க்கிறதை பாருங்கள். இன்னும் இரண்டு வருஷம் போகட்டும். ஆண் பிள்ளைகள் இந்தப் பக்கமே நடமாடத் துணிய மாட்டார்கள்.'

சிறுமிக்கு கோபம் பெரிசாக வந்துவிட்டது. 'ஆமாம், நான் பார்த்துவிட்டால் இந்த பணிக் காத்திக்கு என்ன நஷ்டமாகப் போயிடுத்தாம். கடவுளே, நான் என் பாட்டுக்குப் போறேன்.' தனக்குள் ஏதோ முனகிக்கொண்டு அவள் விறுட் டென்று போய்விட்டாள்'

நளினி சொன்னாள். 'பொங்கி, அலட்டிக் கொண்டு போகட்டுமே அவள். இப்படித்தான் யாராவது ஒருவர் வந்தால் போதும், முற்றத் துக்கு வந்து தலையை காட்டிவிடுவாள்.

கணக்கெடுப்பவனுக்கு அங்கே உட்கார்ந்தி ருப்பது கொஞ்சம் சங்கடமாக இருந்தது.

'ஆமாம், உன் தொழில் என்ன என்கிறதை நீ சொல்லவே இல்லையே.'

'சொல்லவில்லையா? ஒரு வீட்டில் என்னெல் லாம் வேலை இருக்கோ அத்தனையையும் நான் செய்கிறேன்.'

'நான் தெரிந்துக்க விரும்புகிறது உனக்கு வரும்படி வரக்கூடிய வேலை என்ன என்கிறதைத் தான்.'

'வரும்படி வரக்கூடிய வேலை எதுவும் எனக்கு இல்லையானால் எனக்கு ஏதாவது வேலை நீங்கள் கொடுப்பீர்களா?'

'நீ என்னிடம் இதை கேட்டாயானால்—'

'கேட்டால் போதும் கொடுத்து விடுவீர்கள் இல்லையா?'

அவன் கொஞ்சம் குழப்பமடைந்து சுற்றி விழித்தான்.

அவள் சொன்னாள்: 'ஒரு வீட்டுக்கு யாரா வது வந்தால் அவர்களுக்கு மரியாதை ..'

அவன் சடக்கென கேட்டான். 'நான் ஏதாவது மரியாதைக் குறைவாக சொல்லிவிட்டேனா?'

'நீங்கள் சொல்லவில்லை. நான்தான் மரியாதை காட்டவில்லை. நீங்கள் வெற்றிலை போட்டுக் கொள்வீர்கள் இல்லையா?' அவள் உள்ளே சென் றாள். உள்ளே அவள் எதையோ தேடுவதை அவன் கவனித்தான்.

கொஞ்சநேரத்தில் அவள் வெற்றிலையையும் மற்ற உபகரணங்களையும் கொணர்ந்தாள். அவன் தன் கவனத்தை அவைமீது திருப்பினான். இன் னொருதரம் அவள் உள்ளே சென்று மூன்று மரப் பொம்மைகளுடன் வந்தாள். அவள் சொன்னாள்:—

'இதுதான் என் தொழில் ஒரு பொம்மை செய்ய ஒரு நாளுக்குமேல் ஆகாது'

அவைகளை கையில் எடுத்துப் பார்த்தான் அவன். எல்லாம் பெண் உருவங்கள். ஆறு ஏழு அங்குல உயரம் இருக்கும் ரொம்ப நேர்த்தியாக செதுக்கப்பட்டவை. பளிச்சிடும் வர்ணம் தீட்டப் பட்டிருந்தது. வழவழப்பாயும் உருண்டு திரண் டும், அழகான அங்கங்கள், நல்ல வளைவுகள். அங்கப்பொருத்தமானவை. நிறைய தலைமயிர். வசீகரமான புன்சிரிப்பு. மொத்தத்தில் ரொம்ப கவரக்கூடிய, அழகிய கலைப்படைப்புகள். அவன் அவைகளை கூர்ந்து உற்றுப்பார்த்தான். அவன் அவளையும் பார்த்தான்.

'இந்த நாலும் எவ்வளவு ஒரே மாதிரியாக இருக்கு! என்ன அதிசயம்!'

'இதிலே நிஜமான அதிசயம், மூன்று பொம் மைகளை பார்த்துவிட்டு ஒருவர் நாலு என்று எண் ணுவதுதான்' என்றாள் அவள்.

அவன் பதில் எதுவும் சொல்லவில்லை.

'இதெல்லாம் அச்சில் வார்த்ததா?'

'நாங்கள் வெண்கல—வேலைக்காரர்கள் இல்லை.'

'கடைசல் பட்டறையில் செய்யப்பட்டதாக இருக்கலாம். பாற்கடலை அவர்கள் கடைந்தபோது கிடைத்த லக்ஷ்மி மாதிரி இருக்கு.'

'அவர்கள் பாற்கடலை கடைந்தபோது நான் அவர்களோடு கூடச் சேரவில்லை. அதனாலே நான் லக்ஷ்மியையும் பார்த்ததில்லை. என் தொழில் என்ன என்கிறதை உங்களுக்குக் காட்டினேன். அவ்வளவுதான் நல்லது. எப்படி நாலு என்கிறீர் கள்?'

'உயிர் இல்லாத இந்த மூன்றையும் இவை களை செய்யும் உயிருள்ள ஒருவரையும் சேர்த்து குறிப்பிட்டேன் இவை எல்லாம் ஒரே மாதிரியாக இருப்பதுதான் ரொம்ப அதிசயம்!

'வேறுவிதமாக சொல்லப்போனால் உயிர் உள்ள ஒன்று இந்த உயிர் இல்லாதவைகள் மாதிரி இருக்கு, அதானே அதிசயம்? இதில் அதிசயப்பட எதுவும் இல்லை. அது என் தலைவிதி.'

அவள் கண்கள் பளிரிட்டன. அவள் மறுபடி யும் உள்ளே சென்று திரும்பியபோது அவள் கன் னங்கள் செவந்திருந்தன. அவள் கையில் இன் னொரு சிறு சிலை இருந்தது. அதை அவன் பக்கத் தில் வைத்தாள். அவன் தன் கைகளில் அதை எடுத்தான்.

'இது கிருஷ்ணனா, கம்ஸவதமா? அல்லது கிருஷ்ணன் மாதிரி உடை அணிவிக்கப்பட்ட கொள்ளைக்காரனா? இதுமட்டும் இதைவிட பெரி தாக இருக்குமானால் காய்கறித் தோட்டத்தில் சோளக்கொல்லை பொம்மையாக வைக்க உப யோகப்படும். இல்லை, இன்னும் சின்னதாக இருந்தால்...'

அவள் அவனை இடைமறித்தாள். 'இப்படித் தான் ஆச்சு. சுமார் ஐம்பது பொம்மைகள் நான் செய்தபிறகு இதேமாதிரியே வந்தது. முதலில் கிருஷ்ணன் உருவம் செய்தேன். பார்த்தவர்கள் எல்லாம் அவைகளையும் வாங்கினார்கள். ஒவ் வொன்றுக்கும் மூணு, நாலணா கிடைக்கும். போகப் போக உடுப்புகள்தான் கிருஷ்ணனுடைய தாக இருந்ததேதவிர உருவம் வேறு ஒரு கிருஷ்ண னாக ஆகிவிட்டது. அந்த வேறொரு கிருஷ்ணன், உங்களுக்குத் தெரியுமே, நான் ஒரு காலத்தில் கிருஷ்ணனாக கருதி இருந்த அதே ஆள்தான். அவனைப்பற்றி நினைக்கிறபோதெல்லாம் எனக்கு ஏகக் கோபம் வரும். நான் செய்கிற உருவம், என் கோபம் அதன் முகத்தில் பிரதிபலிக்க,

அவனைப்போலவே தோன்ற் ஆரம்பித்தது. போகப் போக ஜனங்கள் இந்த பொம்மைகளை வாங்குவதை நிறுத்திவிட்டார்கள். ஆண் உருவங்கள் செய்கிறதையே நான் நிறுத்திவிட்டேன். ஸ்ரீ பார்வதி உருவம் செய்ய ஆரம்பித்தேன். அதாவது பெண்உருவம்செய்து அதை ஸ்ரீபார்வதி என்று பெயர் வைத்தேன். நான் ஸ்ரீ பார்வதியை பார்த்ததே இல்லையே, பார்த்திருக்கேனா என்ன.? ஸ்ரீ பார்வதி சிவபெருமானுடன் ஆடினது மற்ற விஷயங்கள் எல்லாம் நான் கேள்விப்பட்டிருக்கேன். அதை சினிமாவிலேயும் பார்த்திருக்கேன். பார்வதியும் பரமேஸ்வரரும் சில சமயம் தங்களுக்குள்ளே 'சண்டைப்பிடித்துக் கொள்வதுண்டு என்கிறதும் தெரிந்தது. இதையெல்லாம் மனதில் கொண்டு நான் பார்வதி உருவம் செய்ய ஆரம்பித்தேன். என்னை கண்ணாடியில் பார்த்துக் கொண்டு பார்வதியின் முகபாவங்களை என் முகத்தில் தோன்றச்செய்து பிறகு மரக்கட்டைக்கு அவைகளை ஏற்றுவேன், நான்தான் பார்வதி என்று கற்பனை செய்துகொண்டு. முடிவில் எல்லா பார்வதி பொம்மைகளும் ஒரே மாதிரி ஆகிவிட்டது...'

அவள் தொடருமுன் அவன் சொன்னான்: 'பார்வதியும் நீயும் ஒரே ஆளாகிவிட்டீர்கள்.'

'என்ன சொல்கிறீர்கள், பார்வதியும்நானும் ஒரே ஆளா? பாருங்கள், என்மாதிரினா பார்வதி ஆக ஏற்பட்டது! அவைகளை விற்க எனக்கு வெட்கமாக இருந்தது. என் உருவ பொம்மைகளை நானே விற்பது என்றால் . ?

அவன் அவசரப்பட்டு சொன்னான், 'அவைகளை வாங்க பலபேர்கள் இருப்பார்களே ''.

'நானே அதையெல்லாம் பார்த்தேனே. ஆனால் அவைகளை வாங்குகிறவர்கள்கூட என்னை நிந்திப்பார்கள், உருவங்கள் நன்றாக இருக்கின்றன, ஆனால் அதெல்லாம் ஆடம்பரமாக தன்னை காட்டிக்கவும் ஆண்களை வசீகரிக்கவும் தான் விற்கிறதாகவும் இதுமாதிரி எல்லாம் பேச்சு. நான் கொஞ்சம் முந்தி சொன்னேனே அந்த கதா, நினைவில் வைத்துக்கொள்ளுங்கள் என் முகத்துக்கு நேரேயே இதெல்லாம் சொன்னாள். நான் சூடாக திருப்பிக் கொடுத்தது அவள் கண்களையே அநேகமாக குருடாக்கி இருக்கணும். அப்புறம் நான் நினைத்தேன் என் காதுலே விழாத இடத்திலே எல்லாம் அவள் இதெல்லாம் சொன்னால் நான் எப்படி அவளை திட்ட முடியும்? நான் செய்ததை வேறே ஒருத்தி செய்தால் கதா மாதிரியே தான் நானும் நடந்து கொண்டிருப்பேன்.'

''அது உண்மையாக இருக்கலாம், இருந்தாலும் தன்னைப் போலவே இப்படி இந்த மாதிரி செய்கிற திறமை உண்மையாகவே வியக்கத்தக்கதுதான்.'

அவள் சொன்னாள்: 'நீங்கள் என்னை முகஸ்துதி செய்கிறீர்கள். ஒரு உருவம் அதுமாதிரி செய்தால் அதிலிருந்து எத்தனையோ அதேமாதிரி செய்யலாம் இல்லையா? ஒருவர் கண்ணாடியில் தன் உருவத்தை பார்த்துக் கொண்டு ஒன்றை செதுக்கணும், அவ்வளவுதான், அப்படி ஒன்றும் பிரமாதம் இல்லை.'

'அது நிஜம்தான்',

'இந்த சுற்றுப்புறத்திலேஇருக்கிற ஒவ்வொருத்தரும் நான் எதைச் சொன்னாலும் அது உண்மைதான் என்று சொன்ன காலம் உண்டு. அவர்களை எல்லாம் கண்டாலே எனக்கு பயம் '

'இப்போ நீ என்னைக் கண்டு பயப்படவில்லை என்று நினைக்கிறேன்.'

'இப்போ யார் கிட்டவும்எனக்கு பயம் இல்லை எனக்கு வெளியே யாரும் இருப்பதாகக் கூட நினைத்து நான் அலட்டிக்கிறதில்லை.'

'அநேக கலைஞர்கள் அப்படித்தான் இருக்கிறார்கள்.'

'அதைத்தான் 'நான்' என்கிற உணர்வு என்று சொல்வது' என்று அவன் தனக்குள் சொல்லிக் கொண்டான். அவள் உள்ளே போய் திரும்பி வந்தாள்,

இன்னும் நாலு பொம்மைகளை அவன் முன் வைத்தாள். அவை எல்லாம் அவள் உருவங்கள் கருணை, கோபம், வியப்பு காமாவேசமான தோற்றங்களுடன்.

'இந்த நாலும் முதல்தரமான கலைப்படைப்புகள் என்று நான் சொன்னால் நான் வெறும் முகஸ்துதிக்காரன் என்றுதான் நீ நினைப்பாயா?'

'அப்படி நினைக்காமல் இருக்க முயற்சிப்பேன் ஆனால் முதல் தரமானது என்றெல்லாம் ஏன் சொல்லுகிறீர்கள்? இப்போதெல்லாம் நான் இவைகளை விற்கிறதே இல்லை, பகல் நேர சலிப்பிலே இருந்து தப்பிக்கத்தான் நான் இதுகளை செய்கிறேன். ஒரு நாள் இதுகளுக்கு கிராக்கி இருக்கும் என்பது எனக்குத் தெரியும். என்னையே பார்க்காதவர்கள் கைகளுக்கு இவை கிடைக்கிற போது ஒரு விபசாரியின் சுயவிளம்பரம் 'என்று சொல்லி இவைகளை நிந்திக்க மாட்டார்கள் என்று எனக்குத் தெரியும்.'

'ஒருவருக்கு நல்ல கைத்திறன் இருக்கு. உண்மையாக ஒரு நிபுணர். இருந்தாலும் அதைக் கொண்டு சம்பாதிக்க முடியவில்லை. ரொம்ப பரிதாபகரமானது. இந்த அவதூறுக்கெல்லாம் ஏன் பயப்படுகிறாய்? ஜனங்கள் தங்கள் நாக்கை ஆட்டிக் கொண்டு போகட்டுமே. நீ ஏன் அதை கவனிக்கிறாய்? ஒரு குருட்டுப் பயல்கூட இந்த சிற்ப பொம்மை ஒண்ணுக்கே ஒரு ரூபாய் தாராளமாக கொடுப்பானே, யாரையும் நம்பி இராமல் நீ வாழலாமே. தொழில் சிற்பி என்றுதான் நான் எழுதப் போகிறேன்.'

அவன் அதையே எழுதிக்கொண்டான். மற்ற விஷயங்களையும் கிறுக்கிக்கொண்டான். அவளுடைய சகோதரனைப் பற்றி விசாரித்து அந்த தகவலையும் குறித்துக் கொண்டான். இதுக்கிடையே அவள் ஒன்றைத் தவிர மற்ற எல்லாத்தையும் உள்ளே கொண்டுபோய் வைத்தாள். ஒன்றை கையில் வைத்துக்கொண்டிருந்தாள்.

இன்னொரு தரம் அவன் வெற்றிலை போட்டுக் கொண்டான். இதுகளில் எதையும் நீ விற்கமாட்டாய், அதானே சொல்கிறாய்?'

'இதுகளை நான் தின்றுவிடுகிறதும் இல்லை, அல்லது நெருப்பிலே போட்டுவிடுகிறதும் இல்லை'.

'இவை நிறைய வைத்திருக்கிறாயா நீ?'

'நீங்கள் இப்போது எடுக்கிற சென்ஸஸ் கணக்கில் இந்த கேள்வியும் சேர்ந்ததா?'

'நல்லது, நான் இப்போது புறப்படுகிறேன், கணவனுடன் சண்டை-நீ சொன்னது...'

அவள் இடித்துப் பேசினுள்: 'நான் உங்களுக்கு சொல்லவில்லே? நல்லது, கணவனைப் பற்றி அன்னியரிடமும் வழியில் போகிறவரிடமும் ஒருத்தி இன்னும் அதிகமாக என்ன சொல்ல முடியும்? அவன் ஒரு மிருகம். நிறைய குடிப்பான். குடிபோதையில் வெறி நாய் மாதிரி நடந்து கொள்வான். ரோட்டிலே போகிற யாரோடேயும் ஒவ்வொருத்தரோடேயும் வலுச் சண்டைக்குப் போவான். அப்புறம் சமத்தியாக அடியும் வாங்கிப்பான். நிதானம் வருகிறவரை அதாவது விடிகிறவரை ராத்திரி போலீஸ் ஸ்டேஷனில் தான் தூங்குவான். ஒரு நாள் ராத்திரி, அகாலமான பிறகு நான்போய் என் ''பணிக்கனே'' ஜாமீனில் விடுதலே பெறச் சொல்லி ஒரு போலீஸ் காரர் மூலம் ஹெட்கான்ஸ்டேபிள் சொல்லி அனுப்பினர். விடிந்த பிறகு அவனே விடுதலே செய்தால் போதும் என்று நான் அவரிடம் சொன்னேன். என் கணவன் இல்லாதபோது யாராவது வீட்டுக்குள் நுழைந்து ஏதாவது வம்பு செய்தால நான் புகார் செய்ய போலீஸ் ஸ்டேஷனுக்கு போகமுடியாது என்று போலீஸ்காரர் என்னே எச்சரித்தார். நான் சொன்னேன் அவருக்கு, யாராவது என் இடத்தில் வந்து வம்பு செய்தால் என் தலேயணேக்கு அடியிலே கூர்மையான உளி வைத்திருக்கேன் என்று. அவர் போய் விட்டார். ஒரு மணி கழித்து என்கணவன் போதையில்தடுமாறிக் கொண்டுவந்தான். நான் எதுவும் பேசவில்லே; பகல்ஆனதும் நான்அவன் கிட்ட கொஞ்சநாளேக்கு ஊருக்குப் போய் இருக்கப் போகிறேன் என்று சொன்னேன். அவன் கேட்டான், 'இப்போ போவானேன்?' நான் சொன்னேன், 'இனிமேல் நான் இங்கே தங்கினுல் யாரையாவது நான் என் உளியாலே கொலே செய்ய் அவசியம் ஏற்படும். அதனுலே தான் நான் போகிறேன்.' அவன்என்ன பதில் சொன்னுன் தெரியுமா?; 'அந்த சமயம் என் கையும் சும்மா கட்டிக்கொண்டு இருக்காது, நினேவு இருக்கட்டும்.' என்ருன் அந்த மிருகம்! நீ மிருகம். உன்கூட நான் வாழத்தயாராக இல்லே என்று வீட்டை விட்டு வெளியேறி விட்டேன், ரோடுக்கு வந்தேன். பஸ் ஏறி நேரே இங்கு வந்து விட்டேன். அவனேப் பற்றி இதுமாதிரி எத்தனேயோ அருவருப்பான கதைகள் இருக்கு. அதை எல்லாம் நான் சொல்ல விரும்பவில்லே.'

அவள் நிறுத்தியதும் அவன் எழுந்தான்,

'உங்களுக்கு இஷ்டமானுல் இதை நீங்கள் உங்களுக்கே வைத்துக் கொள்ளலாம்' என்று சொல்லிக்கொண்டே தன் கையில் இருந்தமரஉருவத்தை அவன் முன் நீட்டினுள்.

அவன் சந்தோஷத்தோடு வாங்கிக்கொண்டு அதைப் பார்த்தான். ரௌத்ர பாவத்தில் அவள் உருவம் அது. அதைப் பார்த்ததும் அவன் முகம் விழுந்து விட்டது. இருந்தாலும் அவளுக்கு நன்றி சொல்லிவிட்டு பெஞ்சிமீது ஒரு காகிதத்தை வைத்து,' இதை கொஞ்சம் பாரு' என்ருன் அவன்.

அவள் பார்த்தாள். அதில் அவன் அவள் மாதிரியே வரைந்திருந்தான்! அவள் இன்னும் கவனித்துப் பார்த்தாள்.

'நெடுகப் பேசிக்கொண்டே நீங்கள் இதை வரைய முடிந்தது அதிசயம். நான் கொடுத்த அந்த பொம்மையை தயவு செய்து என்னிடம் திருப்பித் தாருங்கள்.' அவள் உள்ளே சென்று பார்வதி தவம் செய்கிற மாதிரி இன்னும் கொஞ்சம் பெரிய பொம்மையுடன் வந்து கலேஞனிடம் அதை கொடுத்தாள். சந்தோஷமும் நன்றியும் குறிக்கும் முகபாவத்துடன் அவன் அந்த வெகுமதியை பெற்றுக் கொண்டான்.

'நல்லது, போய்வாருங்கள்' என்று அவள் சொல்லிக் கொண்டு வெளியே வந்தாள். அவன் அடுத்த வீட்டுக்கு வந்தான். அவன் நெஞ்சில் வீணேத்தந்திகள் நாதம் எழுந்துஎதிர்ரொலித்தது.

('ஸமீக்ஷா' பத்திரிகையின் அகில இந்திய எழுத்தாளர் மகாநாடு மலரில் வந்த இங்கிலீஷ் மொழி பெயர்ப்பிலிருந்து தமிழாக்கப்பட்டது மலேயாளத்திலிருந்து இங்கிலீஷில் மொழி பெயர்த்தவர் ஏ. என் நம்பியார்)

---

## இன்றையத் தமிழ் இலக்கியத்தில் சில போக்குகள்

(32—ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரிக்கர்களும் அடங்கிய உலகம் அது. அது மட்டுமல்ல; மேலே நாடுகளேப் பாதித்து மாற்றும் சக்தி பெற்று வருகிற இந்திய, சீன, ஜப்பானியக் கருத்துக்களேயும் போக்குகளேயும் நாம் அறிந்து கொள்ளவேண்டும். இன்றைத் தமிழ் இலக்கியத்தில் உலக நோக்கு மிகவும் அவசியமாகும். உலக இலக்கியத்தில் மற்ற இலக்கியங்களுடன் சரி சமமாக தமிழ் இலக்கியமும் இடம் பெறவேண்டுமானுல் ஒரு உலக நோக்கு நமக்கு மிகவும் அவசியமாகும். இது விமரிசகன் உண்டாக்கித் தரவேண்டிய ஒரு நோக்கு. இலக்கியத்தில் உலக நோக்கைச் சம்பாதித்துக் கொள்ளமுடியாத எவரும் இன்று விமர்சகனுக இருக்க இயலாது. ஒரே உலகம் என்கிற தத்துவம் அரசியல் பற்றி எப்படியானுலும் இலக்கியம் பற்றிய வரையில் அவசியம், கைவந்த ஒரு கொள்கை என்றில்லாத விமர்சகன் தமிழில் மட்டுமல்ல, எந்த மொழியிலுமே நல்ல விமரிசகன் ஆகமாட்டான். இந்த இலக்கிய உலக நோக்கைக் காண ஒரு பயிற்சி, ஒரு தேர்ச்சி நமக்குத் தேவை. இன்று நமது இலக்கியாசிரியர்களும் வாசகர்களும் இலக்கியத்துக்கும் விமரிசனத்துக்கும் ஒரு பயிற்சி தேவை என்று உணராமலே இருப்பதைத் தான் மிகவும் சோகமான உண்மையாகச் சொல்லவேண்டும். ஐ. ஏ. ரிச்சார்ட்ஸ், டி. எஸ். எலியட், எப். ஆர். லீவிஸ், எஸ்ரா பவுண்டு போன்றவர்களுடைய கருத்துக்களே மட்டும் இங்கு எடுத்து நட்டுவிட்டால் போதும் என்று நினேப்பது தவறு. அப்படி நினேத்துக் காரியம் செய்பவர்களேயும் நமது விமர்சகர்களிலே நாம் காண்கிறும்; அது துயரம் தருகிற ஒரு சின்னமாகும்.

# எண்ணத் திவலைகள்

## கி. ரா.

எண்ணத்தில் பெறும் கற்பனை நிலைகளைக் கொண்டு நாம் வாழ்க்கையை வாழ்ந்து, வாழ்க்கையை வாழும்போதே, எண்ணத்தில் தெளிவையும் நிலையானதொரு சக்தியையும் பெற்று வாழ்க்கையின் போக்கையறிந்து எந்த சமயமும் நிலை பெற்று வாழ்வதே நரஜீவர்கள் என்ற நிலையைப் பெற்றுள்ள நாம் வாழும் வழி. இந்த வழியை நாம் பெற்று வாழத்துணை செய்யும் இலக்கியமே நிறைவைக் கூட்டி வைக்கும் இலக்கியம்.

இலக்கியம் என்ற சொல்லைக்கொண்டு நோக்கினுல் வாழ்க்கையை வாழும் சமயம் அந்த வாழ்க்கையின் இறுதி லட்சியத்தைப் பெறத்துணை செய்வதே இலக்கியம் என்ற பெயருக்குப் பொருத்தமானது என்று கொள்வது சரியாகும். இந்தப் பொருளின் அடிப்படையிலேயே நம்முடைய நாட்டுப் பெரும் புலவர்கள் பாடியுள்ள காவியங்களும் நாடகங்களும் அமைந்துள்ளன என்பதைக் காணலாம். உதாரணமாக பெரும் புலவர் புகழேந்தி பாடியுள்ள நளவெண்பாவை எடுத்துக் கொள்வோம்.

நளவெண்பாவின் கதை என்ன ?

நளன் என்ற நாயகன் தன்னுடைய வாழ்க்கையில் பெரும் துன்பத்தைப் பெற்று பலவித சங்கடமான சூழ்நிலைகளில் வாழ்ந்து இறுதியில் தன்னுடைய வாழ்க்கைத் துணைவியுடன் சேர்ந்து வாழ்கிறுன். இந்தக் கதையை இந்தக் காலத்து ஆசிரியர்களும் எழுதலாம். சூழ்நிலை மாற்றத்தைத் தவிர வேறு எந்தவிதமான மாற்றமும் தேவை இல்லை. ஆனுல் இந்தக் காலத்து எழுத்தாளர்கள் கூறும் கதைகளைப் படித்து எந்த வாசகராவது எண்ணத்தில் நிறைவைப் பெறும் வாய்ப்பு உண்டா ?

எத்தனையோ கதைகள் இன்று பத்திரிகைகளின் மூலம் வாராவாரம் வெளியாகின்றன. அந்தக் கதைக் கூட்டத்தைக்கொண்டு இன்று நம்முடைய நாட்டில் தமிழ்மொழியில் இலக்கியச் செல்வம் வளர்ந்துள்ளதாய் கூறும் வாய்ப்பு உண்டா? எந்தக் குறிப்பிட்ட கதாசிரியரையாவது வாழ்க்கையை வாழ வழிகாட்டி உள்ளார் என்று கூற வழியுண்டா ?

உணர்ச்சி வேகத்தைத் தூண்டிவிட்டு நிலையற்ற கற்பனை வாழ்க்கையைக் காட்டி எந்த வாசகரும் எண்ணத்தில் கணநேர அமைதியைப்பெறும் வாய்ப்பின்றி உள்ள கதைகளே மலிந்து கிடக்கின்றன. கதையென்ருல் கற்பனைதானே என்று கேட்கலாம், கற்பனையான கதையைக்கொண்டு வாழ்க்கையை நிறைவாய் வாழ துணை செய்யும் எழுத்தாளனே உண்மையான எழுத்தாளன் என்று கூறினுல் அந்தக் கூற்றை மறுப்பது சரியல்ல.

பொய்யான சூழ்நிலை, இல்லாத உருவங்கள், நடைபெற வழியில்லாத நிகழ்ச்சிகள் இந்த வகையில் உள்ளவையைப் பற்றி இங்கு பேசவில்லை. கற்பனை வளத்தைப் பெருக்கி இளைஞர்களுடைய எண்ணத்தில் சில பெரும் படிப்பினைகளைப் பதிய வைக்கும் நோக்கத்துடன் கூறப்படும் மேற்சொன்னவகைக் கதைகளே பஞ்சதந்திரக் கதைகள், வேதாளக் கதைகள் போன்ற புராதனக் கதைச் செல்வங்கள். நாம் தற்காலத்தில் வாழும் நிலையை ஒட்டி இன்று எழுதப்பெறும் கதைகளைப் பற்றியே பேசுகிறேம்.

இன்றைய வாழ்க்கை என்ற காரணத்தைக் கொண்டு நம்நாட்டுப் பெருஞ்செல்வங்களாய் விளங்கி வாழ்க்கையை நிறைவாய் வாழத் துணை செய்து வந்துள்ள இலக்கியச் செல்வங்களின் அடிப்படை லட்சியத்தை மறந்துவிட்டோமென்று கூறவே மேலே இன்றைய நிலையைப்பற்றித் தெளிவாய்க் கூறினேன். நம் நாட்டில் சென்ற இருபது ஆண்டுகளில் வாழ்க்கைச் சூழ்நிலை வேகமாய் மாறி வருவதை நான் அறிந்துள்ளேன். ஆனுல் சூழ்நிலை மாறியிருப்பினும் நரஜீவர்களுடைய எண்ணநிலை என்றும் போல்தான் செயற்பட்டு வருகிறது. எண்ணநிலையைக் கொண்டுதான் எல்லா ஜீவர்களும் வாழ்ந்து வருகிருர்கள். அடிப்படைத் தேவைகள் என்ற வாழ்க்கைத் தேவைகள் அப்படியேதான் இன்றும் உள்ளன.

எண்ணத்தின் நிலை சூழ்நிலையைக்கொண்டு இயங்குவது உண்மை. ஆனுல் எண்ணத்தின் போக்கு எப்போதும் போலவே நிலையில்லாமல் ஓடிக்கொண்டேதான் உள்ளது. எண்ணத்தின் லட்சியமும் எப்போதும்போல் நிறைவைப்பெற்று நிலைபெறுவது என்றுதான் இன்றும் உள்ளது. அப்படி உள்ள நிலையில் நாட்டு நிலையைக்கொண்டு நம்முடைய வாழ்க்கையை நிறைவாய் வாழ வேண்டிய லட்சியத்தை மறப்பது சரியாகுமா ?

வாழ்க்கை என்ற நிலை என்றும் ஒரே நிலையில் தான் உள்ளது. அந்த வாழ்க்கையை வாழ்ந்து நிறைவைப்பெற்று நிலைபெறுவதே வாழ்க்கையின் லட்சியம் என்று கொண்டு நோக்குங்கால் இன்றைய தமிழ் இலக்கியத்தின் நிலையைக்கண்டு எவரும் பெருமைப்பட வழியில்லை என்று கூறுவதே என்னுடைய கட்டுரையின் நோக்கம்.

இனி, இன்றைய சூழ்நிலையைப் பெற்றுள்ள நாம் எந்த வழியில் செயல்பட்டு நம்முடைய இலக்கிய செல்வத்தை வளம்பெற்று விளங்க துணை செய்யலாம் என்று விசாரிப்போம்,

தமிழ் மொழியில் மட்டுமின்றி சம்ஸ்கிருத மொழியிலும் நிறைவைக் கூட்டிவைக்கும் இலக்கியம் ஏராளமாய் உள்ளது. அந்த இலக்கியச் செல்வத்தை யெல்லாம் தகுதி பெற்றோரைக் கொண்டு தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டால் நாம் மறந்துபோன லட்சியங்களைப் பெற்று தமிழ் இலக்கிய செல்வத்தை வளர்க்கும் வாய்ப்பு உண்டாகும். இந்த வகையில் தனித்தனியே சில செல்வர்கள் செயலாற்றி வருகிறார்கள். அந்தச் செல்வர்களுக்கு வேண்டிய வாய்ப்பையும் வசதியையும் அளிக்கவேண்டியது அரசாங்கத்தினுடைய பெருங் கடமையாகும்.

மேல்நாட்டு இலக்கியச் செல்வம் அளவு கடந்து இன்று தமிழ் மொழியில் வெளியிடப் பட்டு வருவது நன்றே ஆனால் இந்தத் துறையிலும் வாழ்க்கையை வாழத்துணை செய்யும் இலக்கியங்களை தேர்ந்தெடுத்து தக்கோர் மூலம் வெளியிடுவதுதான் சரியாகும். மேல் நாட்டினுடைய இலக்கியம் யாவையுமே உயர்வான லட்சியத்தை அடிப்படையாய் கொண்டுள்ளவையாய் கூற வழியில்லை. வாழ்க்கை என்ற நிலையைப்போல் நிச்சய நிலையை காட்டும் இலக்கியமே நிறைவான இலக்கியம். வாழ்க்கையைப்போல் தோற்றம் அளித்து வாழ்க்கையில் பெறும் அனுபவங்களைக்கொண்டு எண்ணத்தில் கசப்பையும் வெறுப்பையும் ஏமாற்றத்தையும் தோற்றுவிக்கும் இலக்கியங்களையே மேல்நாட்டினர் இன்று சிறப்பான இலக்கியமாய் கூறுகின்றனர். இந்த வகை இலக்கியத்தைப் பெற்று தங்களுடைய வாழ்க்கையை மேலும் நிலை பெறாமல் வாழ்ந்து இறுதியில் எண்ணத்தின் வேக சக்திகளினால் தாக்குண்டு நிலை பெயர்ந்து அவதியுறும் ஜீவர்களுடைய எண்ணிக்கை மேல்நாட்டின் நகரங்களில் பெருகி வருவதைக் கண்டாவது நான் கூறும் லட்சிய இலக்கியத்தின் தேவையை உணரலாம்.

எண்ணத்தின் நிலையைப்போல் நுட்பமான நிலை வேறில்லை. அந்த நுண்ணிய கருவியைக் கொண்டுதான் பேரதிசயமாய் விளங்கும் விஞ்ஞானப் பெரும் உண்மைகளை அறிஞர்கள் கண்டு பிடித்துள்ளனர். அந்த மிகத்துல்லியமான நிலையைக் கொண்டுதான் கம்பன், காளிதாசன், ஷேக்ஸ்பியர் என்ற பெருஞ்செல்வர்கள் கவிதைப் பெருஞ்செல்வத்தை ஊற்றுமடை திறந்த வெள்ளம்போல் கொட்டியுள்ளார்கள். ஆகையால் ஜீவர்கள் பெற்றுள்ள எண்ணத்தின் பெருமையைப் பற்றி எவ்வளவு கொண்டாடினாலும் பொருந்தும். இந்தவிதம் செயலாற்றும் தெய்வீகப் பெருஞ்சக்தியை உள்ளடக்கியுள்ள எண்ண நிலை என்ற அதிசயச் செல்வத்தை எவ்வளவு கவனமாய்ப் பாதுகாக்க வேண்டுமென்பது பற்றி நம்நாட்டு இன்றைய எழுத்தாளர்கள் எண்ணிப் பார்த்து செயலாற்றுவது அவசியம்.

இந்தக் கட்டுரையை எழுதும் அடியேனது வாழ்க்கையில் பெற்றுள்ள சிறு அனுபவத்தைக் கூறி இந்தச் சிறு கட்டுரையை நிறைவுறப் பூர்த்தி செய்கிறேன்.

என்னுடைய வாழ்க்கையை நிறைவாய் வாழ விரும்பி என்னுடைய வாழ்க்கையில் பெரும் பகுதியை மேல்நாட்டு ஆசிரியர்களுடைய நூல்களைப் படிப்பதிலேயே கழித்துள்ளேன். எண்ணத்தைத் திருத்தும் நோக்கத்துடன் இலக்கியம், தத்துவம் வரலாற்றுநூல், சமுதாயஇயல்பண்டையப்பொருளாராய்ச்சி, நரஜீவருடைய தோற்றம் வளர்ச்சி இவற்றை விவரித்துக் கூறும் மானிட இன வரலாறு ஆகிய எல்லாத்துறைகளிலும் ஈடுபட்டு ஓயாமல் பல நூல் நிலையங்களின் துணையைக் கொண்டு எண்ணற்ற நூல்களைப் படித்து சோர்ந்தேன். என்னுடைய வாழ்க்கை என்ற நிலையைப் பற்றி எனக்கு வழிகாட்டும் வகையில் நான் ஒரு நூலைக் கூட காணவில்லை என்றால் இந்தச் சொல் மெய்யான சொல்லாகும்.

மேல்நாட்டினுடைய வாழ்க்கை வேறு நம்முடைய நாட்டினுடைய வாழ்க்கை வேறு என்று கூறுவோரும் உண்டு. அப்படி கூறுவது சரியல்ல என்று இந்தக் கட்டுரையின் தொடக்கத்திலேயே கண்டுள்ளோம். நரஜீவர்கள் என்றால் எண்ண நிலையைக் கொண்டே வாழவேண்டி உள்ளது என்ற அடிப்படையில் எந்த விதமான மாறுதலும் இல்லை. வாழ்க்கையை நிறைவாய் வாழவேண்டுமானால் எண்ணத்தில் நிறைவையும் பெற்று நிலை பெற்று வாழ்ந்தால் சாத்யம் என்ற நிலையிலும் மாறுதலில்லை இந்த அடிப்படையை ஏற்று தங்களுடைய இலக்கிய செல்வத்தை நிறைவாய் செய்து காட்டிய காவியப் பெருஞ் செல்வரே ஷேக்ஸ்பியர் என்ற கவியரசன் ஷேக்ஸ்பியரைப் போலவே இலக்கியத் துறையில் நிறைவைக் கூட்டி வைத்துள்ள இன்னொரு செல்வரே சார்லஸ் டிக்கன்ஸ் என்ற கதாசிரியப் பெரும்புலவன்.

என்னுடைய வாழ்க்கையில் நான் கண்டுள்ள பேருண்மை இதுதான் இலக்கியத்துறை என்ற பெயரால் தன்னிச்சையால் செயல்பட்டு கொடுமை குரூரங்களையும் குறுகிய எண்ணத்தின் விளைவான கோர சொரூபங்களையும் ஒருவரும் பயன் பெறவகையில்லாத வழியில்எடுத்துக்காட்டிபக்கங்களை நிரப்பி,பண்புக்கும் பெரு வாழ்வுக்கும் வழி காட்ட இயலாத வகையில் இன்று அசுர வேகத்தில் தயாராகி வரும் பத்திரிகைக் கூட்டத்தின் விளைவான தற்காலத் தமிழ் இலக்கியத்தின்பெருக்கம் திருத்தப்படாவிடில் நாட்டின் வருங்கால சந்ததிகளின் கொடிய சாபத்தைப் பெற்று நம்முடைய வாழ்க்கை என்ற சோதனை சாலையில் தோற்று நிற்கும் வாய்ப்பைப் பெறுவோம் என்பதே அந்த அனுபவ உண்மை. என்னுடைய இந்தச் சிறுகட்டுரையை நான் எழுதியதன் நோக்கம் இதை படிக்கும் என்னுடைய சகோதர எழுத்தாளர்களுடைய எண்ணத்தின் இதன் மூலம் நான் கூறிய வழியில் ஏதேனும் சிறுமாறுதல் ஏற்படலாம் என்று எண்ணியே யன்றி எந்த எழுத்தாளருடைய எழுத்தையும் குறை கூறும்எண்ணம் எனக்கு இல்லை. இந்த நிறைவைக் கூட்டிவைக்கும் வழியில்தான் நானும் எழுத முற்பட்டு சில

சிறுகதைகளை எழுதியுள்ளேன். தரத்தைப் பற்றி நான் பெருமையடைந்து இந்த வார்த்தையைக் கூறவில்லை என்னுடைய இந்த லட்சியத்தை நிறைவேற்றும் நோக்கத்துடனேயே அந்தக் கதைகளை எழுதியுள்ளேன் என்று குறிப்பிடவே விரும்புகிறேன்.

நான் எழுதியுள்ள நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகளில் சில இந்த லட்சியத்தின் அடிப்படைக்கு முரணுகவே உள்ளன. என்பதை நான் அறிவேன். ஆனால் குறிப்பிட்ட அந்தக் கதைகளை நான் எழுதிய சமயம் என்னுடைய எண்ணத்தில்நிறைவைப் பெற்று நான்நிலை பெருத சமயம் சென்ற ஒன்பது வருஷகாலத்தில் நான் எழுதியுள்ள கதைகளையெல்லாம் மேலே கூறிய லட்சியப் பரீட்சையில் தேறிவிடும் வாய்ப்பைப் பெற்றுள்ளன என்று நான் நிச்சயமாய் கூறுவேன்.

என்னுடைய இலக்கிய வேட்கையை என்னுடைய இளமையிலேயே நான் பெற்றிருந்தேன். ஆகையால் என்னுடைய எட்டாவது வயதுக்கு முன்னரே நம் நாட்டுக் காவியச் செல்வங்களான ராமாயணம், பாரதம், பாகவதம் ஆகியவற்றை நன்கு படித்து பயன் பெற்றுள்ளேன் என்னுடைய பதினுரும் வயதுக்குள்ளாக ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்று ஆங்கில நாட்டு இளைஞர்களுடைய வளர்ச்சியை எண்ணி வெளியிடப்பட்டுள்ள அதிசயக்கற்பனை கதைகளான ஆண்டர்சன் கதைகள், ஈசாப் கதைகள் அரபு மோகனக் கதைகள், ஆகியவற்றைக் கற்று அவைகளைக் கொண்டே வளர்ந்துள்ளேன். என்னுடைய கல்வி பள்ளிப்படிப்பைவிட புத்தகப்படிப்பின் மூலமே நிகழ்ந்துள்ளதென்று கூறுவது பொருந்தும்.

நான் இருபது வயதை தாண்டும் முன்னர் ஆங்கில இலக்கியத்தில் பெரும்புகழ் பெற்றுள்ள ஆசிரியர்கள் என்று கூறத் தக்க ஷேக்ஸ்பியர் ஷெல்லி, தன்னிகரில்லாத் தனிப் பெரும் புலவன் மில்டன் போன்ற புலவர்களுடைய திறமையை கூறும் இலக்கியப் பெருஞ் செல்வத்தை நன்கு கற்று தேர்ந்தேன். என்னுடைய எழுத்தார்வத்தை நான் பெற்றதற்கு ஒரு சிறப்பான தூண்டுகோல் ஆங்கிலப் பெருஞ் செல்வர்களுடைய நிறைவைக் காட்டும் கதைகளே ஆகும். இந்தக் கதாசிரியர்களுடைய வரிசையில் என்னுடைய பெருமதிப்பைப் பெற்று என்னுடைய எழுத்துக் கலைக்கு நான்வழிகாட்டியாய் ஏற்றுள்ள ஒரே ஆசிரியன் சார்ல்ஸ் டிக்கன்ஸ் என்ற பெஞ் செல்வனே ஆகும். டிக்கன்ஸ் வாழ்ந்த நாட்டு நிலையைக் கொண்டு அந்த நாட்டின் பெருமக்களுடைய பொதுநலனைக் கொண்டு நோக்கினுல் சார்ல்ஸ் டிக்கன்ஸ் என்ற பேராசிரியனையே நான் கூறியுள்ள லட்சிய ஆசிரியனுய் எந்த எழுத்தாளரும் ஏற்றுக் கொள்ளலாம் என்று கூறுவேன்.

என்னுடைய வாழ்க்கையை நான் நிறைவாய் வாழ்ந்து இன்று என்னுடைய எண்ணத்தில் நிறைவான சாந்தியைப் பெற்று நிலை பெற்றுள்ளேன் என்றுல் அந்தப் பேராசிரியனுடைய சொற் செல்வமான டேவிட் காப்பர்ஃபீல்ட் என்ற பெருங்கதை அதற்கு ஒரு காரணம். அந்த தெய்வீகப் பெருங்கதையை நான் ஒரு தடவை யல்ல. பல தடவை படித்துள்ளேன். ஓரோர் சமயம் நானே டேவிட் காப்பர்ஃபீல்ட் என்ற கதாநாயகன் என்று எண்ணி வாழ்க்கை என்னும் சற்று பொருத்தமற்ற நிலையை எண்ணி நைந்து கரைந்து கண்ணீர் விட்டுள்ளேன் ஆனல் எந்த சமயம்படித்தாலும் இறுதியில் எண்ணத்தில் ஒரு நிலையான சாந்தியை பெற்று நிலை பெற்றுள்ளேன்.

இந்த பெருஞ் செல்வத்தைப் படைத்துள்ள பேராசிரியப் பெரும்தகைக்கும் இன்று கற்பனை என்ற போர்வைக்குள் பதுங்கி படுக்கையறைக் காட்சிகளையும் பரம்பரையற்ற வடிவங்களையும் பண்ணிக் குவிக்கும் ஆச்சரிய எழுத்தாளர்களுக்கும் தொடர்புண்டா என்று நம்நாட்டு எழுத்தாளச் செல்வர்கள் எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய எண்ணத்திவலைகள் என்ற கட்டுரைத் தொடரை இத்துடன் நிறுத்திக்கொண்டு மீண்டும் ஒரு முறை என்னுடைய சகோதர எழுத்தாளர்களை மேலே கூறியவற்றை சற்றுஊன்றிப் படிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

---

# தேடுதல்

தர்மூ சிவராமூ

தேடினேன்—
அறை, மூலை, கதவிடுக்கு
புகைச்சீலைத் திரைகள்
அடுக்கிய அடுக்களைமேடை
செந்நிழல் ஆடும்
தணல் வெளி ..
புகை உதிர்ந்து
குவிந்த ஒளிச்சாம்பல் ..
எங்கும்.
கண் கழன்று விழுந்து
கபாலக் குழாய் இருண்டு,
கிளறின விறகு
பற்றிக் கருகி,
தேடும் நானும்
தேட்டம் நீயும்
புதைந்து புழுத்தாலும்
மறைந்தாலும்,
இருக்கும்; ஓயாது, ஒழியாது
இருக்கும்—
தன வாயைத்
தானே விழுங்கும்வரை

# ஆசிரியர் பேச்சு

ஒவ்வொரு இந்திய மொழிக்கும் தனித்தனியாக சாகித்ய அகாடமி பரிசு ஆண்டுதோறும் கொடுக்கப்படுவது நமக்கு தெரியும். அதுக்கும் மேலாக இந்தியா முழுவதுக்கும் பொதுவான ஒரு பரிசு, எல்லா மொழிகளிலும் தலைசிறந்ததாகக் கருதப்படும். ஒரு நூலுக்கு பரிசு கொடுக்கும் ஒரு புது ஆரம்பம் செய்யப்பட்டிருக்கிறது. ஒரு லக்ஷம் ரூபாய் தொகை கொண்ட 'பாரதீய ஞானபீட்' பரிசு இந்த ஆண்டு 'ஓடக்குழல்' என்ற மலையாள கவிதை நூலுக்கு கிடைத்திருக்கிறது. 'மகா கவிஜி' என்று மலையாளத்தில் அபிமானத்துடனும் மரியாதை செலுத்தியும் அழைக்கப்படும் கவி ஜி. சங்கர குருப் இந்த பரிசை பெற்றிருக்கிறார். அவருக்கு இந்த பரிசு அறிவிக்கப்பட்ட சமயம் ஆல்வேயில் ஐந்தாவது அகில இந்திய எழுத்தாளர் மகாநாட்டின் கடைசி நாள் நடவடிக்கை நடைபெற்றுக் கொண்டிருந்தது. இந்தியா பூராவுக்குமான ஒரு எழுத்தாளர் மகாநாட்டில், அகில இந்திய எழுத்தாளர்கள் பிரதிநிதிகளின் பாராட்டுகள் அவருக்கு அன்று கிடைத்தது ஒரு தனித்த வாய்ப்பு. பரிசு பெற்றதுக்கு சங்கர குருப் நம் பாராட்டுக்கு உரியவர்.

பரிசு பெற்ற சங்கர குருப் மட்டும் இல்லை; இன்னும் பரிசு பெறாத அவர் தரத்து படைப்பாளிகள் இந்தியா முழுக்க பரவி இருக்கிறார்கள். இவர்களில் சிலரை அந்த மகாநாட்டில் பார்க்க முடிந்தது. மற்றும் சிலரைப் பற்றி கேட்க முடிந்தது. அவர்கள் என்னெல்லாம் செய்திருக்கிறார்கள் என்பதையும் கொஞ்சம் மேலோட்டமாக படிக்கப்பட்ட கட்டுரைகள் மூலம் அறிந்துகொள்ள முடிந்தது. இவ்வளவு இருந்தும் நான் எனக்குள் கேட்டுக் கொண்டேன்; ஒவ்வொரு ஆண்டும் இதே மாதிரி அவரவர் மொழி இலக்கிய தற்கால போக்குபற்றி பட்டியல் படித்து பெருமை பேசி விட்டுப் போய்க்கொண்டே இருந்தால் என்ன லாபம்? எத்தனை ஆண்டுகள்தான் ஒருவர் மொழி சிறந்த இலக்கியம் மற்ற மொழி படைப்பாளிகளுக்குக்கூட தெரியாமல் குருட்டாட்டம் ஆடுவது போலவும், அவர்கள் சோதனை சாதனை தெரியாமலும் இருப்பது என்று.

இதைப்பற்றி பலருடன் பேசினேன். அவர்களும் என்னைப் போலவே தங்களைக் கேட்டுக் கொண்டிருப்பவர்கள் என்பதை தெரிந்துகொண்டேன். ஒருவர் இலக்கியம் மற்றவருக்குத் தெரியாமல் என்ன கருத்துப் பரிமாறுதல் செய்து கொள்வது? எனவே நான் அவர்களிடம் சில யோசனைகளை கூறினேன். அதாவது ஒரு மொழியிலிருந்து அதில் தலைசிறந்ததாக கருதப்படும் ஐம்பது கவிதைகள், பதினைந்து சிறுகதைகள், மூன்று நாவல்கள் இவைகளை அந்த மொழி இலக்கிய விமர்சகர்கள் தங்கள் பொறுப்பில் தேர்ந்தெடுத்துத் தரவேண்டும். அவைகளை மற்ற மொழிகளில் மொழிபெயர்க்கும் வெளியிடும் பொறுப்பை ஏற்று ஒருவரோ சிலர் சேர்ந்தோ செய்யவேண்டும். அடுத்த தடவை மகாநாட்டில் சந்திக்கும்போது ஒருவர் இலக்கியம் பற்றி மற்றவர் பேசவேண்டும். விவாதிக்க ஒரு அகில இந்திய அடிப்படை இருக்கும் என்பதுதான் அந்த யோசனை. உற்சாகமாக வரவேற்கப்பட்டது இது. அந்த பொறுப்பை உடனடியாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் சிலர். உற்சாகம் எப்படி செயல்படப் போகிறது என்பதை பார்க்கவேண்டும். நான் இதுக்கான காரியங்களை செய்து கொண்டிருக்கிறேன். முதல் ஆரம்பமாக இந்த எட்டில் மலையாளக் கதை வருகிறது. காரூர் நீலகண்ட பிள்ளையின் தலைசிறந்த சிறுகதைகளில் இது ஒன்று என்று அந்த மொழி ரசிகர்கள், விமர்சகர்கள் தேர்ந்தெடுத்துக் கொடுத்தது. வாசகர்கள் இந்த மொழிபெயர்ப்புகளை கவனித்துக் கொண்டு வரும்படி கேட்டுக்கொள்கிறேன். இந்த வித முயற்சி நமக்கு ரொம்பவும் லாபகரமானதாக இருக்கும் என்று எனக்கு நம்பிக்கை.

இந்த ஏட்டில் அகில இந்திய எழுத்தாளர் மகாநாட்டில் ஆல்வேயில் படிக்கப்பட்ட க. நா. சுப்ரமண்யம் கட்டுரையும் என் கட்டுரையும் மொழி பெயர்க்கப்பட்டு வெளியாகி இருக்கின்றன. நாங்கள் அங்கு சொன்னது என்ன என்பதை வாசகர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்று நான் நினைக்கிறேன். 'அவர் பெயரை சொல்லவில்லை', 'இவர் பெயரை விட்டு விட்டார்கள்', 'இருட்டடிப்புச் செய்கிறார்கள்,' 'ஒரே கோஷ்டி' என்றெல்லாம் இங்கு அர்த்தம் இல்லாமல் பேசியதுக்கு பதிலாகவும் இந்த கட்டுரைகள் இங்கு தரப்படுகின்றன. முதலில் நம் மொழியில் நாம் இலக்கிய விசாரணைகள் செய்து, படைப்பாளியின் திறமை, படைப்பின் இலக்கியத்தரம் பற்றி எல்லாம் ஆராய்ந்து இங்கு அவர்கள் இடம் பற்றி எல்லாம் நிதானித்தாகவேண்டும். பிறகு தான் அகில இந்தியாவுக்கும் அவர்களை கொண்டு போகமுடியும் சும்மா பட்டியலுக்காக அங்கே கொண்டுபோக முடியாது. போனாலும் எடுபடாது. நம் மொழியில் நடக்கிற மகாநாடுகள், கருத்தரங்கங்கள் ஒன்றிலாவது பேசவதே கிடையாது. ஏன், இலக்கியப் பேச்சு, விவாதம், என்றால் அந்த திசைப் பக்கமே திரும்புவதில்லை பத்திரிகைகளும், இந்த உணர்ச்சிப் பேச்சாளர்களும். இலக்கிய அக்கறை இன்மை, மன ஒதுக்கம், பலவித அபிமானம் இதெல்லாம் வைத்துக்கொண்டு, பார்க்கிற நிலை இப்போது. தமிழ் இலக்கிய வரலாறு நூல்களில் தற்கால இலக்கியம்பற்றி அக்கறையும், போதிய விஷய அறிவும் கொண்டு எழுதாமலும் இருக்கிற நிலையும் இப்போது. இந்த நிலையில் அவனவன் ரசனைக்கேற்ப அபிப்ராயம் கூறுவதைக்கண்டு சீறி விழுவதில் அர்த்தம் இல்லை. தங்கள் அபிப்ராயங்களை ஆதாரத்துடன் எடுத்துச் சொல்ல முன்வருவதுதான் செய்யவேண்டிய காரியம் தமிழில் நாம் இதுபற்றி விவாதிக்க வேண்டிய சமயம் வந்துவிட்டது. வெளியிடப்பட்டிருக்கிற கட்டுரைகளைப் போன்ற கட்டுரைகளை வரவேற்கிறேன். கட்டுரைகள் உணர்ச்சி வசப்பட்டதாக இருக்கக்கூடாது. ஆக்கபூர்வமான விமர்சனக் கட்டுரையாக இருந்தால்தான் பிரசுரிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

—சி. சு. செ.

## எழுத்து பிரசுரம் வெளியீடுகள்

| | | | |
|---|---|---|---|
| 1. சொர்க்கத்தில் சம்பாஷணை | வ. ரா. | ரூ. | 3-00 |
| 2. வசந்த காலம் (கட்டுரைகள்) | ,, | ரூ. | 3-00 |
| 3. பதினெட்டாம் பெருக்கு (சிறுகதைகள்) | ந. பிச்சமூர்த்தி | ரூ. | 4-00 |
| 4. வழித்துணை (கவிதைகள்) | ,, | ரூ. | 2-00 |
| 5. அகல்யை (ஓரங்க நாடகங்கள்) | கு. ப. ரா. | ரூ. | 4-00 |
| 6. ஆண்சிங்கம் (சிறுகதை) | வல்லிக்கண்ணன் | ரூ. | 4-00 |
| 7. சில விஷயங்கள் (கட்டுரைகள்) | சிட்டி | ரூ. | 3-00 |
| 8. சத்யாக்ரகி (சிறுகதைகள்) | சி. சு. செல்லப்பா | ரூ. | 4-00 |
| 9. மணல் வீடு ,, | ,, | ரூ. | 4-00 |
| 10. கோடை வயல் (கவிதைகள்) | தி. சோ. வேணுகோபாலன் | ரூ. | 1-25 |
| 11. கனவுப் பறவை (சிறுகதைகள்) | கர்ணன் | ரூ. | 2-50 |

விவரங்களுக்கு எழுதவும்

கிடைக்குமிடம் :—

**எழுத்து பிரசுரம்**

19-A, பிள்ளையார் கோவில் தெரு, சென்னை-5.

# எழுத்து

## புது சந்தா விகிதம்

ஜனவரி 1966 முதல்

| | |
|---|---|
| ஆண்டுச் சந்தா | ரூ. 6-00 |
| மூன்று ஆண்டுகள் | ரூ. 15-00 |
| வெளி நாடுகளுக்கு | ரூ. 8-00 |
| மூன்று ஆண்டுகள் | ரூ. 20-00 |
| தனிப்பிரதி | 50 பைசா |

பிரதி இங்கிலீஷ் மாதம்

முதல் தேதி வெளிவரும்

விவரங்களுக்கு :

**எழுத்து**

19-A, பிள்ளையார் கோவில் தெரு,
சென்னை-5

# EZHUTTHU

## Tamil literary monthly

### ADVERTISEMENT TARIFF

*INSIDE PAGE*

| | | |
|---|---|---|
| Full Page | 15×20 cms | Rs. 80-00 |
| Half ,, | 15×10 / 7½×20 ,, | Rs. 40-00 |
| Quarter ,, | 7½×10 / 15×5 ,, | Rs. 20-00 |
| Back cover | | Rs. 100-00 |
| Inside covers | | Rs. 90-00 |

*Concession for Contract Page*

**EZHUTTHU**

19. A, Pilliar koil St., Madras-5


EZHUTTHU Edited and Published by C. S. Chellappa, from 19-A, Pilliar Koil Street, Madras-5.
Printed by M. Ramanatha Rao for Central Press, 97, Big Street, Triplicane Madras-5